# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

சனிக்கிழமை 09.10.2021 supeedsam.com supeedsam@gmail.com







# இராகலையில் தீ விபத்து; ஐவர் உடல் கருகி பலி

## பல கோணங்களில் விசாரணைகள் ஆரம்பம்







(க.கிஷாந்தன், கேதீஸ்)

இராகலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இராகலை இலக்கம் (01) தோட்ட பிரிவில் மண்ணால் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக தனி வீடு ஒன்று நேற்று முன்தினம் (07) இரவு பத்து மணியளவில் தீ பிடித்துள்ளது.

இந்த திடீர் தீ விபத்து சம்பவத்தில் இவ் வீட்டில் வசித்து வந்த ஆறு பேரில் இரண்டு சிறுவர்கள் உட்பட ஐவர் தீயில் சிக்குண்டு உயிரிழந்துள்ளனர்.

இதன் போது குறித்த சம்பவத்தில் தாய், தந்தை மற்றும் மகள், மகளுடைய ஒரு வயது மற்றும் 12 வயது உடைய இரு ஆண் பிள்ளைகள் என ஐவர் தீயில் எரிந்து சம்பவ வீட்டிலேயே உயிரிழந்துள்ளனர். மேலும் சம்பவத்தை கேள்வியுற்ற

02 ஆம் பக்கத்தில்...

# விடுதலைப்புலிகளின் சோத்துக்கள் யார் வசம்?

## கே.பி என்ன கூறினார்?



தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் சொத்துகள் எதுவும் தன்னிடம் இல்லை எனவும் இறுதிப்போரின் போது தான் மலேசியாவில் தலைமறைவாகியிருந்ததாகவும் விடுதலைப்புலிகள் அமைப்பின் சர்வதேச வலையமைப்பின் பிரதானியாக கருதப்பட்ட கே.பி. எனப்படும் குமரன் பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி இரணைமடுவில் அமைந்துள்ள

02 ஆம் பக்கத்தில்...

# வடக்கு- கிழக்கினை அபிவிருத்தி செய்யும் திட்டங்கள் கூட்டமைப்பிடம் உள்ளன

வடக்கு கிழக்கிலுள்ள வளங்களை வைத்துக்கொண்டு அந்த பகுதிகளை அபிவிருத்தி செய்வதன் ஊடாக நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தக்கூடிய வழிமுறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் உள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், நாட்டை நடத்தி செல்ல வருமானம் அதிகமாக இருக்க வேண்டும். செலவு குறைவாக இருக்க வேண்டும். சாதாரணமாக கூறுவது என்றால் நாட்டில் பணம் இருக்க வேண்டும்



02 ஆம் பக்கத்தில்...

# போது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் பைத்தியகாரர் போன்று புலம்புகிறார்

(காந்தன்)

தர்கா நகரில் கலவரத்தை ஏற்படுத்தியது போன்று மீண்டும் அவ்வாறான பிரச்சினைகளை ஏற்படுத்தி நாட்டை அழித்துவிடவேண்டாம் என ஞானசார தேரரிடம் தலை சாய்த்து



13 ஆம் பக்கத்தில்...

# மாகாணங்களுக்கிடையிலான பயணத்தடை தொடர்ந்தும் நீடிப்பு

(ஊர்காவலன்)

தற்போது அமுலிலுள்ள மாகாணங்களுக்கு இடையிலான பயணத் தடையை எதிர்வரும் 21ஆம் திகதி வரை நீடிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற கொரோனா ஒழிப்பு செயலணிக் கூட்டத்தின் போதே குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

# புலம்பெயர் தமிழர்களின் புத்திசாதுரியத்தை புரிந்து கோண்டாரா இலங்கை ஜனாதிபதி?

## ஸ்ரீநேசன் முன்னாள் பா.உ

புலம் பெயர் தமிழர்களைப் புலிகள் என்றும், புலிகளின் நிழல்கள் என்றும் சிங்கள ஆட்சியாளர்கள் அலட்சியப்படுத்தி வந்தார்கள். குறிப்பாக மகிந்த ராஜபக்ச தலைமையிலான கட்சியினர் இவ்விடயத்தில் கூர்மையாக இருந்தனர். ஆனால் நல்லாட்சிக் காலத்தில் புலம்பெயர் தமிழர்களை வெறுக்காமல் அவர்களுடனும் பேச வேண்டும் என்ற உண்மையை ஆட்சியாளர்கள் புரிந்து கொண்டார்கள்.



02 ஆம் பக்கத்தில்...

# யுனிசெப் நிறுவன விருதுக்கு தெரிவு செய்யப்பட்ட மட்டு மாநகர முதல்வர்



(துதிமோகன்)

உலகலாவிய ரீதியில் யுனிசெப் நிறுவனத்தால் நடாத்தப்படும் Cities Inspire awards நிகழ்வுக்கு உலகலாவிய ரீதியில் தெரிவாகியுள்ள 05 மாநகர முதல்வர்களுள் மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தி.சரவணபவன் அவர்களும் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்டு மட்டக்களப்பு மண்ணுக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

# பாசிக்குடா சுற்றுலா விடுதியின் நீச்சல் தடாகத்தில் நீராடிய ஆறு வயது சிறுமி மரணம்

( எச்.எம்.எம்.பர்ஸான்)

பாசிக்குடா சுற்றுலா விடுதியின் நீச்சல் தடாகத்தில் நீராடிக் கொண்டிருந்த ஆறு வயது சிறுமி ஒருவர் நீரிழ் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டி ரம்புக்கன பகுதியைச் சேர்ந்த குடும்பத்தினர் பாசிக்குடாவிலுள்ள சுற்றுலா விடுதி ஒன்றில் தங்கியுள்ளனர்.

02 ஆம் பக்கத்தில்...

# வடக்கில் சட்டவிரோத மீன் பிடியை உடனடியாக தடுத்து நிறுத்துங்கள்!

## வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ்



(வாஸ் கூஞ்ஞ)

வடக்கு மாகாணத்தில் இலங்கை தென் பகுதி மீனவர்களாலும் மற்றும் இந்திய இழுவைப் படகுகளாலும் இப் பகுதி மீனவர்கள் மிகவும் பாதிப்புகளுக்கு உள்ளாகி தங்கள் பொருளாதாரத்தை

02 ஆம் பக்கத்தில்...

# பால் மா விலை அதிகரித்தது

(காந்தன்)

அரசாங்கத்தினால் கட்டுப்பாட்டு விலை நீக்கப்பட்ட நிலையில், பால் மாவிற்கான புதிய விலைகளை பால் மா இறக்குமதியாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

02 ஆம் பக்கத்தில்...

# சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட ஆறு உழவு இயந்திரங்களுடன் ஆறுபேர் கைது

(எப்.முபாரக்)

திருகோணமலை அக்போபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட ஆறு உழவு

02 ஆம் பக்கத்தில்...










## சட்டவிரோதமான முறையில் மணல்

இயந்திரங்களுடன் ஆறு சந்தேக நபர்களை கைது செய்துள்ளதாக அக்போபுர பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கந்தளாய் மற்றும் அக்போபுர பகுதியைச் சேர்ந்த ஆறுபேரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அக்போபுர சீனி அலை மூன்றாவது வலயத்தில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட போது சூரியபுர விசேடஅதிரடை படையினரால் பொலிசாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சூரியபுர விசேட பொலிசாரும் அக்போபுர பொலிசாரும் இணைந்து கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர்களை தடுத்து வைத்துள்ளதோடு கந்தளாய் நீதிமன்றில் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்த உள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## பால் மா விலை அதிகரித்தது

இதன்படி, ஒரு கிலோகிராம் பால் மாவை 350 ரூபாவாலும், 400 கிராம் பால் மாவை 140 ரூபாவாலும் அதிகரிப்பதற்கு தீர்மானித்துள்ளதாக பால்மா இறக்குமதியாளர்கள் சங்கத்தின் உறுப்பினர் லக்ஷ்மன் வீரசூரிய தெரிவித்துள்ளார்.

இதனால், இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் பால் மா பைக்கட்டின் விலை 1,300 ரூபாவாகவும், 400 கிராம் பால்மா பைக்கட்டின் விலை 520 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படும் என நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

## யுனிசெப் நிறுவன விருதுக்கு தெரிவு செய்யப்பட்ட

ஐக்கிய நாடுகள் சபையின் யுனிசெப் நிறுவனத்தினால் நிகழ்த்தப்படும் Cities Inspire awards நிகழ்வானது எதிர்வரும் நவம்பர் 1%ம் திகதி நடைபெறவுள்ள நிலையில் அந்நிகழ்வில் அன்று உரையாற்றுவதற்காக உலகின் 05 மாநகர முதல்வர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். குறித்த அந்த நிகழ்வில் உரையாற்றுவதற்காகத் தெரிவு செய்யப்பட்ட ஐவருள் ஒருவராக மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தியாகராஜா சரவணபன் அவர்களும் தெரிவாகியுள்ளார்.

யுனிசெப் நிறுவனத்தின் சிறுவர் நேய மாநகர திட்டத்தினை இலங்கையில் அமுல்ப்படுத்துவதற்காக மட்டக்களப்பு மாநகர சபையானது கடந்த வருடம் தெரிவு செய்யப்பட்டிருந்த நிலையில் குறித்த திட்டத்தினை மிகவும் ஆக்க பூர்வமாகச் செயற்படுத்தியமைக்காக மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தியாகராஜா சரவணபவனுக்கு இந்த கௌரவம் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வில் பங்கு கொள்வதற்காக உலகலாவிய ரீதியில் 05 மாநகரசபை முதல்வர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் தெற்காசியாவில் இருந்து தெரிவாகியுள்ள ஒரே ஒரு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பில் மாநகர முதல்வர் தெரிவிக்கையில், இந்த கௌரவத்தினை மாநகரசபையின் கௌரவ உறுப்பினர்கள் , பலவிதமான தடைகள் எல்லாவற்றையும் தாண்டி குறித்த திட்டத்திற்காக உழைத்த மாநகரசபை உத்தியோகஸ்த்தர்கள் மற்றும் எமது சபையின் முதுகெலும்பாக திகழும் ஊழியர்களுக்கு சமர்ப்பிப்பதாகத் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

குறித்த சிறுவர் நேய மாநகர திட்டத்தினை நேர்த்தியான முறையிலே முன்னெடுத்துச் செல்வதற்கு உறுதுணையாக நின்ற மட்டக்களப்பு மாநகரசபையின் கௌரவ உறுப்பினர்கள், பலவிதமான தடைகள் எல்லாவற்றையும் தாண்டி குறித்த திட்டத்திற்காக உழைத்த மாநகரசபை உத்தியோகஸ்த்தர்கள் மற்றும் எமது சபையின் முதுகெலும்பாக திகழும் ஊழியர்களுக்கு இந்த கௌரவத்தினை சமர்ப்பிப்பதோடு குறித்த திட்டத்தினை சிறப்பாக நடாத்துவதற்கு எமது மட்டக்களப்பு மாநகரசபைக்கு முழு ஆதரவினை வழங்கிய யுனிசெப் ( Unicef ) மற்றும் செரி ( Ceri) நிறுவனங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன் என்று தெரிவித்துள்ளார்.

## பாசிக்குடா சுற்றுலா விடுதியின் நீச்சல்

அங்கு தங்கியிருந்த குடும்பத்தின் பிள்ளைகள் நீச்சல் தடாகத்தில் நீராடிக் கொண்டிருக்கும் போது ஆறு வயதுடைய சியாம் செய்னப் எனும் சிறுமி நீரில் மூழ்கி மரணமடைந்துள்ளதாக பொலிஸாரின் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

இவ்வாறு நீரில் மூழ்கி மரணமான சிறுமியின் உடல் தற்போது வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை கல்குடா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## விடுதலைப்புலிகளின் சொத்துக்கள் யார்

செஞ்சோலையில் இன்று நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர், இறுதி யுத்தத்துக்கு பிறகு புலிகளின் சொத்துகள் உங்கள் வசமானது என தகவல்கள் வெளியாகின. அந்த சொத்துகளுக்கு என்ன நடந்தது என ஊடகவியலாளர்களால் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே கே.பி. மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இறுதிப்போரின்போது நான் மலேசியாவில் தலைமறைவாகியிருந்தேன். எனக்கு எந்தவொரு சொத்தும் வழங்கப்படவில்லை. நாளாந்த செலவுக்கே பணம் வழங்கப்பட்டது. அவ்வாறு சொத்துகள் இருந்திருந்தால் எமது மக்களை அழிவில் இருந்து மீட்டிருக்கலாம். அவர்கள் (புலிகள்) எவ்வாறான சொத்துக்களை விட்டுச்சென்றனர் என்பது எவருக்கும் தெரியாது. எனவே, இப்பிரச்சினைக்கு இத்துடன் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என மேலும் தெரிவித்தார்.

அத்துடன் புலம்பெயர் தமிழ் மக்களுக்கு அண்மையில் ஜனாதிபதி விடுத்த அழைப்பு தொடர்பில் இதன்போது ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

ஜனாதிபதியின் தூர நோக்கு தான் இது. அதனை வரவேற்பது தமிழர்களாகிய தமது பொறுப்பு எனவும் படிப்படியாக கைகோர்த்து பயணிக்க வேண்டும் எனவும் கூறிய அவர், இந்த வாய்ப்பை நழுவவிடக்கூடாது என்றார்.




## வடக்கில் சட்டவிரோத மீன் பிடியை உடனடியாக தடுத்து

இழந்து வருகின்றார்கள். ஆகவே சட்டவிரோத மீன்பிடியிலிருந்து வட பகுதி மீனவர்கள் விமோசம்பெற வழி சமைக்க வேண்டும் என வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினரும் தமிழ் ஈழ விடுதலை இயக்க இளைஞர் அணித் தலைவருமான சபா குகதாஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வடக்கு பகுதி மீனவர்கள் மத்தியில் புறையோடியிருக்கும் மீன்பிடி பிரச்சனை தொடர்பாக மாகாணசபை முன்னாள் உறுப்பினரும் தமிழ் ஈழ விடுதலை இயக்க இளைஞர் அணித் தலைவருமான சபா குகதாஸ் ஊடகங்களுக்கு விடுத்திருக்கும் அறிக்கையில்

வடக்கு மாகாணத்தின் கடல்ப் பகுதியில் திட்டமிட்ட வகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் கொக்குளாய் மற்றும் புல் மோட்டைப் பகுதியில் தடை செய்யப்பட்ட சுருக்குவலை மீன்பிடியில் தென்னிலங்கை மீனவர்கள் தீவிரமாக ஈடுபடுவதால் அப் பகுதியில் பூர்வீகமான வாழ்வாதார தொழிலாளக பாரம்பரிய சிறு தொழிலில் ஈடுபடும் தமிழ் மீனவர்கள் பாதிக்கப்படுகின்றனர்

இதனால் அவர்களது நாளாந்த வாழ்வாதார வருமானங்கள் பறிக்கப்படுகின்றன. கடற்றொழில் நீரியல்வளத்துறை உடனடியாக சட்ட விரோத மீன்பிடி முறையை தடுத்து நிறுத்தி பாதிக்கப்படும் மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க வேண்டும்.

வட மாகாணத்தின் மன்னார்இ யாழ்ப்பாணம்இ வடமராச்சி கிழக்குஇ பூநகரிஇ நெடுந்தீவுஇ போன்ற கடற் பகுதிகளில் தொடர்ச்சியாக தமிழக மீனவர்களில் ஒரு பகுதியினர் சட்டவிரோத இழுவலை ரோலர்களைப் பயன்படுத்தி வடபகுதி கடல் வளங்கள் யாவற்றையும் அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபடுவதுடன் வடபகுதி மீனவர்களின் மீன்பிடி உபகரணங்களை சேதப்படுத்துவதுடன் அண்மையில் யாழ் குருநகர் மீனவர்களுடன் வன்முறையில் ஈடுபட்டுள்ளனர். முடிவில்லாமல் தொடரும் அவல நிலைக்கு சம்பந்தப்பட்ட இரு நாட்டு அதிகார சக்திகளும் தலையிட்டு தீர்வு காணுங்கள்.

இலங்கையின் வடபகுதி மீனவர்கள் பொருளாதார ரீதியாக பாரிய பின்னடைவை சந்தித்து வருவதால் தங்களது வாழ்வாதாரத்தை நோக்கி புரிகின்ற மீனவத் தொழிலில் அவர்களது பாதுகாப்பையும் தொழிற் பாதுகாப்பையும் உறுதி செய்வது எல்லோரதும் கடமையாகும்.

ஆகவே பாதிப்புகளுக்கு உள்ளாகி வரும் ஒவ்வொரு மீனவர்களும் ஒற்றுமையாக குரல் கொடுத்து மீனவர்களின் வாழ்வுரிமையை உறுதி செய்வோம் என அழைப்பு விடுத்துள்ளார்.

## புலம்பெயர் தமிழர்களின் புத்திசாதுரியத்தை புரிந்து கொண்டாரா

ஆனால் பிரதமர் மகிந்த தரப்பினர் அவர்களில் பலரையும், பல அமைப்புகளையும் தடை செய்வதில் அக்கறை காட்டினர். ஆனால் இவ்வாறு தடை செய்யப்பட்டவர்கள் புலம் பெயர் நாடுகளில் பயந்து பணிந்து கொண்டிருக்காமல் தமது புத்திசாதுரியமான நகர்த்தல்களை பல்வேறு நாடுகளிலும் மக்கள் எழுச்சியுடன் மேற்கொண்டு வந்தனர்.

இதனால் அவர்களது பலம் ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைப் பேரவை வரை ஊடுருவியது. இலங்கை ஆட்சியாளர்களுக்கு அவர்கள் வேண்டத்தகாதவர்களாக தீண்டத்தகாதவர்களாக இருந்தாலும் மேற்குலக ஜனநாயக நாடுகளில் புலம்பெயர் தமிழர்களின் ஜனநாயக வழியான செயற்பாடுகளுக்கு மதிப்பும், மரியாதையும் கணிசமானைவு காணப்பட்டது.

இறுதியுத்தத்தின் போது இனப்படுகொலை நடைபெற்றது என்பதை நோக்கிப் புலம்பெயர் தமிழர்களின் நகர்வுகள் படிப்படியாகப் பலம் சேர்க்கும் விதத்தில் அமைந்து கொண்டிருக்கின்றன. அதற்கான வழிமுறைகளை நோக்கி புத்திசாதுரியமாக அவர்கள் செயற்பட்டுக் கொண்டுள்ளனர். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினையை புலத்திலுள்ள உறவுகள் போராட்டங்கள் மூலமாக முன்னெடுக்கும் அதேவேளை புலம் பெயர் தமிழ் உறவுகள் அதற்கான சர்வதேச முன்னெடுப்புகளை மனிதவுரிமை மீறல் என்ற வகையிலும் இனப்படுகொலை என்ற வகையிலும் நகர்த்தல்களைச் செய்து வருகின்றனர். இந்த தார்ப்பரியத்தை தற்போது விடாக்கண்டர் கொடாக்கண்டர்களாக இருந்த இலங்கை ஆட்சியாளர்கள் உணரத் தலைப்பட்டுள்ளனர்.

இந்த நாட்டில் இடம் பெற்ற இனப்படுகொலைகளால் புலம்பெயர்ந்து பல நாடுகளில் அகதிகளாகத் தஞ்சம் அடைந்த தமிழ் மக்கள் மேற்குலக அரசியல்களின் பங்காளர்களாகவும் மாறியுள்ளனர். நோர்வே, கனடா, பிரித்தானியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் பிரதான அரசியல் கட்சிகளுடன் பலமான தொடர்புகளை ஏற்படுத்தி கௌரவமாக வாழுவதுடன் மட்டுமல்லாமல், புத்திசாதுரியமான அரசியலையும் செய்து வருகின்றனர். நோர்வே,கனடா போன்ற நாடுகளில் ஈழத்தமிழர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும் உள்ளனர். அமெரிக்க ஜனாதிபதி ஆணைக்குழுவில் ஈழத் தமிழர் உள்ளார்.

இவ்வாறாக சொந்த நாட்டில் இல்லாத உரிமை சுதந்திரம் சமத்துவத்தை மேற்குலக நாடுகள் தமிழர்க்கு வழங்கியுள்ளன.எனவே மேற்குலகில் தமிழர்கள் பல்வேறு துறைகளில் தடம்பதித்து வருகின்றனர். தமிழ் புத்தி ஜீவிகளை ஸ்ரீலங்கா அரசு ஒதுக்கியது ஓரங்கட்டியது. இனவன்முறைகளால் அவர்களை அழிக்கவும் வாய்ப்பளித்தது. இதனால் இந்த நாட்டில் வாழ முடியாத தமிழர்கள் மேற்குலகில் இடம் பெயர்ந்து அந்த நாடுகளில் பக்கபலமாக இருந்து பல்வேறு துறைகளையும் வளர்ப்பதில் பங்களிப்புச் செய்கின்றனர்.தமிழர்கள் என்பதற்காக அடிப்படைவாத்தால் உதறித் தள்ளப்பட்டவர்கள் இன்று உலகநாடுகளில் ஈழத்தமிழர்களின் நீதி நியாயங்களைத் தேடும் சக்திகளாகவும் மூளைவளங்களாகவும் மாறியுள்ளனர்.இனவாதத்தால் உதறப்பட்டவர்கள் தமது இனத்தைப் பாதுகாக்கும் சக்திகளாக மாறியுள்ளனர்.நாட்டை வளர்க்க வேண்டிய மூளைவளங்களை எதிர்சக்திகளாக மாற்றிய சிங்கள ஆட்சியாளர்கள் %3 ஆண்டுகளுக்குப் பின்னராவது திருந்தவார்களா? இல்லை தொடர்ந்தும் பிற்போக்குவாதிகளாக இருக்கப்போகின்றார்களா? என்பதே எமது முனைப்பான பட்டறிவுக் கேள்வியாகும்.

பேரினவாதம் நாட்டை ஆக்கப்பாதையில் கொண்டு செல்லவில்லை அழிவுப்பாதைக்குக் கொண்டு சேர்த்துள்ளது என்பதே உண்மையாகும்.இதனைச் சிங்கள ஆட்சியாளர்கள் உணர்ந்துதான் ஆகவேண்டும்.இல்லையென்றால் அது உணர்தப்பட்டேயாகும் என்பதே உலக நியதியாகும்.யூக்கோஸ்லாவியா,சூடான்,தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளில் இந்த உண்மை உணர்த்தப்பட்டுள்ளது என்பது பட்டறிவுப்பகிர்வாகும்.நாட்டை ஆக்கப்பாதையில் கொண்டு செல்ல வேண்டுமாயின் தமிழர்களுக்கு நியாயமான அரசியல்தீர்வு என்பது காலத்தின் கட்டாய தேவையாகும்.இதன் மூலமாகப் புலம் பெயர்ந்த புத்திஜீவிகளின் ஆற்றல் அர்ப்பணிப்பு நிபுணத்துவம் செல்வம் போன்றவற்றை நாட்டின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தலாம். இல்லையென்றால் நாடு மேலும் குட்டிச்சுவராவதை எவராலும் தடுக்க முடியாது.அத்துடன் சீனா அமரிக்கா இந்தியா யப்பான் போன்ற நாடுகளின் போட்டிக்களமாகவும் இலங்கை மாறுவதைத் தவிர்க்க முடியாது.இதற்கு சீனாவால் கடலில் உருவாக்கப்பட்ட போட்சிற்றி அம்பாந்தோட்டைத் துறைமுகம் முக்கியமான எடுத்துக்காட்டுகளாகும்.

## இராகலையில் தீ விபத்து; ஐவர் உடல் கருகி பலி

வீட்டில் அருகில் உள்ளவர்கள் விரைந்து வந்து கூச்சலிட்டு தீயை கட்டுப்பாட்டுக்கு கொண்டுவர முயற்சித்தும் அது பயனளிக்கவில்லை.

இதன் போது வீட்டின் சுவருகளை உடைத்து எரிந்த நிலையிலான சடலத்தை கண்டுள்ளனர் . இவ்வாறு உயிரிழந்தவர்களில் ஒருவயது சிறுவனான மோகன்தாஸ் ஹெரோஷனுக்கு (07) இரவு முதலாவது பிறந்த நாள் கொண்டாடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்த உயிரிழப்பு சம்பவத்தில் இராமையா தங்கையா (வயது 61), அவரின் மனைவி செவனமுத்து லெட்சுமி (வயது 5%), ஆகியோருடன், மகளான தங்கையா நதியா (வயது 34) இவரின் பிள்ளைகளான, சத்தியநாதன் துவாரகன் (13), முதல் கணவரின் பிள்ளை) மற்றும் தற்போதைய தந்தையான மோகன் தாஸ் ஹெரோசன் (வயது 01) ஆகியோரே தீயில் கருகி உயிரிழந்துள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

இதையடுத்து நேற்று (08.10.2021) காலை 11.46 மணியளவில் சம்பவ இடத்திற்கு வருகை தந்த வலப்பனை நீதிமன்ற நீதவான் டி.ஆர்.எஸ்.குனதாச மரண விசாரணையை முன்னெடுத்தார்.

இதன்போது சம்பவத்தில் உயிர் தப்பிய மகன் தங்கையா இரவீந்திரன் (வயது 30) சடலங்களை அடையாளம் காண்பித்தார்.

பின் சட்ட வைத்தியரின் விசாரணைக்கு பின் சடலங்களை நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல உத்தரவிட்டார். இதன் பிரகாரம் பகல் 1.23 மணியளவில் சட்ட வைத்தியர் பி.ராஜகுரு வருகைதந்து விசாரணையை மேற்கொண்டார்.

அதன்பின் பகல் 2.05 மணியளவில் சடலங்கள் லொரி ஒன்றின் மூலம் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

சம்பவத்தில் உயிர் தப்பிய தங்கையா இரவீந்திரன் மேலதிக விசாரணைக்காக பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து செல்லப்பட்டுள்ளார்.

இந்த தீ விபத்து ஏற்பட்டதற்கான காரணம் இதுவரையும் கண்டறியப்படவில்லை என தெரிவிக்கும் இராகலை பொலிஸார், நுவரெலியா பொலிஸ் கைரேகை அடையாளப்பிரிவுடன் இணைந்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளனர்.

## வடக்கு- கிழக்கினை அபிவிருத்தி செய்யும் திட்டங்கள் கூட்டமைப்பிடம்

உலகில் ஷ்டீவ் ஜொப்ஸ். பில்கேடஸ், ஜெக் மார்க் போன்ற மில்லியனர்கள், பில்லியனர்கள் தமது திறமையால், உழைப்பால் முன்னேறி வந்தவர்கள் என்பதை நாம் அறிவோம். ஆனால், எமது நாட்டில் மில்லியனர்கள் அதிகளவில் உள்ளனர்.

திருட்டுகளின் ஊடாக மில்லியனரகள் ஆனவர்கள் உள்ளனர். அவர்களின் திருட்டுகளுக்கு உதவி செய்த அரசியல்வாதிகள் உள்ளனர். திறமையால் முன்னேறியவர்களும் இருக்கின்றனர்.

எனினும், அரசியல்வாதிகள் உதவியுடன் பணம் சம்பாதித்தவர்களே அதிகளவானவர்கள் உள்ளனர். அண்மைய காலங்களை எடுத்துக்கொண்டால் ஒரு வருடத்துக்குள்ள பில்லியன் கணக்கில் இலாபம் பெற்ற தனியார் நிறுவனங்கள் உள்ளன. அவர்களுக்கு அவ்வாறு முடியும் என்றால், அரசுக்கு வருமானம் குறைவடைந்தமை குறித்து அரசாங்கம் தேடியறிய வேண்டும்.

அரசு வழங்கிய வரி சலுகைகள் காரணமாக பொதுமக்களை விட நிறுவனங்களே அதிகளவில் நன்மை பெற்றனர். இன்று சீமெந்து, பால்மா, கேஸ் உள்ளிட்டவற்றுக்கான கட்டுப்பாட்டு விலைகள் நீக்கப்பட்டுள்ளன. சீனி மோசடி, வெள்ளைப்பூடு மோசடி என்று மோசடிகளை அடுக்கிக்கொண்டே செல்லாம்.

நான் விமர்சிக்கவில்லை. வரிச்சலுகை வழங்கப்படுவதால் சாதாரண மக்கள் மீதே தாக்கம் செலுத்துகின்றது. பாரிய நிறுவனங்கள் பாதிக்கப்படுவதில்லை.

எனவேதான், பொதுமக்களுக்கு நன்மை பெற்றுக்கொடுக்கும் வகையிலான வரிச்சலுகை முறையினரை அறிமுகப்படுத்துமாறு நாங்கள் தொடர்ச்சியாக கூறி வருகின்றோம்.

காணாமல் போனவர்களின் உறவினர்களுக்கு மாதாந்தம் 6 ஆயிரம் ரூபாய் வழங்க 2019 ஏப்ரல் பட்ஜட்டில் முன்மொழியப்பட்டது. இன்றுவரை 153 குடும்பங்களுக்கு மாத்திரம் அந்த கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

அந்த கொடுப்பனவும் 2019 டிசெம்பர் 31ஆம் திகதிக்கு பிறகு வழங்கப்படவில்லை. காணாமல் போன நபர்களுக்கு என்ன நடந்தது என்பதை கண்டறிய வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

எனினும், அதனை செய்யும் வரை அந்த மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படவேண்டும். அதற்காக மரண சான்றிதல் வழங்குவதை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

எனவே காணாமல் போன நபர்களுக்கு என்ன நடந்தது என்பதை கண்டறியும் வரை இந்த தொகை அந்த மக்களுக்கு நிவாரணமாக வழங்கப்பவேண்டும் என்று நாங்கள் கேட்டுக் கொள்கின்றோம்.

வடக்கு கிழக்கில் உள்ள வளங்களை வைத்துக்கொண்டு அந்த பகுதிகளை அபிவிருத்தி செய்வதன் ஊடாக நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தக்கூடிய வழிமுறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பான எம்மிடம் உள்ளது.

கடந்த 2015ஆம் ஆண்டுக்கு முன்னர் வடக்கு கிழக்கில் உங்கள் அருகில் வைத்திருந்த அந்த நபர்கள் செய்த மோசடிகள், திருட்டுகள் காரணமாகவே நீங்கள் பாரிய தோல்வியை அந்தப் பகுதிகளில் சந்திக்க நேரிட்டது. இன்றும் அது தான் நடக்க போகின்றது.

நிதியமைச்சரின் கட்சியை சேர்ந்த மூவரின் பெயரில் மட்டக்களப்பு மண் அகழ்வு அனுமதிப்பத்திரம் உள்ளது. பீ.சந்திரகுமார் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் அமைப்பாளர்.

அடுத்தது, சதாசிவம் மயுரன் வியாழேந்திரனின் தம்பி, அடுத்தது, சிவனேசத்துறை சந்திரகாந்தன். இந்த தகவல்களை நாடாளுமன்றில் தான் நான் பெற்றுக்கொண்டேன்.

நாங்கள் நிதியமைச்சருடன் வடக்கு கிழக்கு அபிவிருத்தி வேலைத்திடங்களில் இணைந்து செயற்பட தயாராக உள்ளோம். எம்மிடம் சிறந்த முன்மோழிவுகள் உள்ளன.

மாவட்ட ரீதியில் சில முன்மொழிவுகளை கூட எம்மால் வழங்க முடியாது உள்ளது. எனவே எமது திட்டங்களை முன்மொழிய எமக்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி தாருங்கள். எனக்குறிப்பிட்டுள்ளார்.



# இலங்கை வாழ் மாணவர்களுக்கு அரிய சந்தர்ப்பம்

## அவுஸ்திரேலியாவில் கல்வித் தகைமையுடன் கூடிய பகுதி நேர வேலைவாய்ப்பு!!

சாதாரண தரத்தில் (O/L ) சித்தி அடைந்த 24 வயதுக்கு உட்பட்டவர்கள் மற்றும் 25 - 35 வயதிற்கு உட்பட்ட (Mature Students) பொருத்தமான ஆரம்பக் கட்ட கல்வித்தகமை உடையவர்களுக்கு, இதோ உலகின் 44 ஆவது இடத்தில் உயரிய கல்வித்தரத்தில் திகழும் அவுஸ்திரேலிய பல்கலைக் கழகமான The University of New South Wales Global, Sydney, Australia (https://www.unswglobal.unsw.edu.au/) தனது Foundation studies கற்கையை எம் மாணவர்களுக்கு வழங்குவதன் மூலம் அவுஸ்திரேலியா நாட்டில் பொருத்தமான பகுதிநேர வேலை வாய்ப்புடன் மேற்படிப்பையும் தொடரக் கூடிய அருமையான வாய்ப்பையும் வழங்குகிறது .இப்பாட நெறியினை கொழும்பு மற்றும் கண்டியில் அமைந்துள்ள AIBT(Asian Institute of Business and Technologyd https://aibt.education/ ) கல்விக் கூடத்தில் மாத்திரமே கற்பிக்க அவுஸ்திரேலிய பல்கலைக்கழகமானது கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு அனுமதி கொடுத்துள்ளது.




# "GRAB YOUR OPPORTUNITY"

**Are you exploring opportunities for world class education with an Australian University?**

The UNSW Global (https://www.unswglobal.unsw.edu.au/) offers an exciting opportunity for you through AIBT Campus (Asian Institute of Business and Technology- https://aibt.education/ ) in Colombo and Kandy providing students a dedicated pathway to achieve their university dreams in Australia to study at University of New South Wales ,Sydney, a top rank work class university .

AIBT will deliver the UNSW Global Foundation Studies Program to students at its campuses in Colombo and Kandy.

For more information, please Call Ms. Lavanya on 077 4898 773 for the course commencing Oct 5th ,2021

## சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்!!! விண்ணப்பிக்க முந்துங்கள்!!

மேலதிக விபரங்களை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் பெற்றுக் கொள்ள அழைக்கவும் **Ms.Lavanya – 077 4898 773**


SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch


Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
sikaramgmbh@gmail.com / www.sikaram.com
Tel : 044 2410241
Fax : 044 2410245


Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57


Allegrotto Pizza Kurier
Allegrotto Pizza Kurier
Bederstrasse 102, 8002 Zürich.
044 280 40 30 | 076 326 91 18
Toll free 0844 80 40 30
pizzakingzurich@gmail.com.
www.allegrotto.ch
Seela Food Gastro AG
044 222 22 50
076 326 91 18
info@seelagastro.ch
www.seelagastro.ch
Züricherstrasse 15
8400 Winterthur.


SwissLife
Select
சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.
உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...
மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி
Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.
Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65


Aaran Ayurveda
& Wellness Massage
Stampfenbachstrasse-24, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt


5ம், 6ம் ஆண்டு மாணவர்களுக்கான
புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்
எங்கே? சூரிச் மாநகரில் கணினித்துறையில்
நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய
Online Tech Network
நிறுவனத்தில்
ECDL
Office
Windows 10
தொடர்புகளுக்கு
MANOJ MASTER
Online Tech Network
Militärstrasse 84, 8004 Zürich
043 811 80 90, 076 524 80 59

# சமமற்ற உலகில் மன ஆரோக்கியம்



**உலக** மனநல தினத்தினை (ஒக்டோபர் 10) முன்னிட்டு உலக சுகாதார தாபனத்தின் இவ்வருட கருப்பொருளான சமமற்ற உலகில் மன ஆரோக்கியம் என்ற தலைப்பில் இந்தக் கட்டுரை வரையப்படுகின்றது.

இந்தத் தலைப்பானது இரண்டு விடயங்களை வெளிப்படுத்துகின்றது அதில் ஒன்று சமமற்ற உலகு அடுத்தது மன ஆரோக்கியம்.

சமநிலையற்ற ஏற்றத்தாழ்வுகள் நிறைந்த இந்த உலகில் மன ஆரோக்கியமாக எவ்வாறு வாழலாம் என்பதனைப் பற்றி யாவரும் அறிந்துகொள்ளவேண்டும்.

ஆசைகள் எண்ணிலடங்காதவை இவற்றுக்கு வரையறைகளே இல்லை மனிதனுக்கு எழுகின்ற இந்த ஆசைகளே அவனுக்கு துன்பங்கயும் ஏற்படுத்துகின்றன இதனால்தான் ஆசைகள் துக்கத்தை விருத்தி செய்கின்றன என பல அறிஞர்களும் சொல்கின்றனர். ஒவ்வொரு மனிதனும் ஏதோ ஒரு இலட்சியத்தினை நோக்கியே பயணிக்கின்றான் அந்த இலக்கே ஒரு பேராசையாகவும் மாறுகின்றது இந்த இலக்கினை அவன் அடைந்தால் இன்னும் இன்னும் மேலே போக வேண்டும் என நினைத்து தொடர் நடவடிக்கையும் அதனால் மன அழுத்தமும் அதனால் கவலையும் கொள்வான் இலக்கினை அடையாவிட்டாலும் அது நிறைவேறவில்லையே என நினைத்து கவலை கொள்வான் எனவே கவலை வெற்றியிலும் உண்டு தோல்வியிலும் உண்டு கவலை வந்தால் மன ஆரோக்கியம் கெட்டு மனநோய் ஏற்பட வாய்ப்பு உண்டு.

மற்றவரின் சொகுசு வாழ்க்கை தனக்குக் கிடைக்கவில்லையே என எண்ணாது தனக்குக் கிடைத்த வசதிகளை வைத்து இன்பம் அடைகின்ற எனனோ அவன்தான் மன ஆரோக்கியமாக வாழ்வான்.

இனி இந்தத் தலைப்பில் உள்ள சமமற்ற உலகு அடுத்தது மன ஆரோக்கியம் இரண்டு விடயங்களையும் தனித்தனியாக பார்த்துவிட்டு பிற்பாடு இரண்டினையும் ஒப்பிட்டு ஒன்றினால் மற்றதற்கு ஏற்படும் தாக்கம் எவ்வாறு மன நலத்தினை பாதிக்கின்றது என்பது பற்றிப் பார்ப்போம்.

## சமமற்ற உலகு

உலகம் பூராகவும் சமூக பொருளாதார ரீதியாக வேறுபாடுகள் நிறைந்துதான் காணப்படுகின்றன. பொதுவாக ஏழை பணக்காரன் என்ற வர்க்க வேறுபாடு முக்கியமானதாக காணப்படுகின்றது இவ்வுலகில் ஒருவன் அல்லது ஒரு நாடு எவ்வாறான சாதி மத இன மொழி நிற கலாசார வேறுபாடுகளைக் கொண்டிருந்தாலும் அவன் அல்லது அந்த நாடு செல்வந்தராக காணப்பட்டால் உலக செல்வந்தர்கள் அல்லது செல்வந்த நாடு என்ற பட்டியலில் சேர்க்கப்பட்டு அவர்கள் தங்களுக்குள் ஒன்று சேர்வதனைக் காண்கின்றோம். இதேபோன்றுதான் கல்வி மேதைகள் மற்றும் அறிஞர்களும் தங்களது தனியான வேறுபாடுகளை மறந்து ஒன்று சேர்கின்றனர். ஆனால் ஏனையோர் அவ்வாறு ஒன்று சேர்வதனைக் காணமுடியாது உதாரணமாக ஒரே மதத்தினை சேர்ந்தவர்களோ அல்லது ஒரே மொழியினை பேசுபவர்களோ தங்களது இதர தனி அடையாளங்களை மறந்து ஒன்றிணைய மாட்டார்கள்.

மேலும் உலகில் மேலைத்தேய நாடுகள் (மேற்கு நாடுகள்) கீழத்தேய நாடுகள் (கிழக்கு நாடுகள்) ஏழை நாடுகள் பணக்கார நாடுகள் மற்றும் முதலாம் உலக நாடுகள் (வளர்ந்த நாடுகள்) இரண்டாம் உலக நாடுகள் (வளர்ந்து வருகின்ற நாடுகள்) மூன்றாம் உலக நாடுகள் (பின்தங்கிய நாடுகள்) என நாடுகளுக்குள் வேறுபாடுகளும் அதன் காரணமாக பல வகையாக அரசியல் மற்றும் பொருளாதார கட்டுப்பாடுகள் வரையறைகள் என்பனவும் காணப்படுவதனைக் காணலாம் இதனால் உலக மக்களின் ஒன்றிணைவு தடுக்கப்பட்டு அங்கே தங்களுக்கிடையிலான சமநிலை என்பது இல்லாமல் போகின்றது. இதுவே உலக மக்களின் மன ஆரோக்கியத்தினை பெரிதும் பாதிக்கின்றது. இனி மன ஆரோக்கியம் பற்றி பார்ப்போம்.

## மன ஆரோக்கியம்

மன ஆரோக்கியம் என்பது உளவியல் நல்வாழ்வின் நிலையையும் மன நோய் இல்லாத நிலையையும் குறிக்கிறது. இது ஒருவரின் உள நிலையானது அவரது உணர்ச்சி நடத்தை என்ற நிலைகளைச் சார்ந்து திருப்திகரமான மட்டத்தில் சமநிலையில் செயற்படுவதைக் குறிக்கிறது. உளச்சுகாதாரம் சிக்கலுடையது. இதனுடைய பொருளையும் செயலையும் பற்றிக் கருத்து வேறுபாடுகள் உளவியல் அறிஞர்களிடையே நிலவுகிறது. ஆரோக்கியமாக உள்ள நலத்தைப் பெறுவதற்குத் தடையாக மூளைத்திசு நோய்களும் ஆளுமை வளர்ச்சியைத் தடுக்கும் காரணங்களும் உள்ளன. மேலும் வேறு சில கராணிகளும் உள நலத்திற்குத் தடைகளாக அமைகின்றன.

## உலக சுகாதார அமைப்பின் (WHO) கருத்துப்படி:

''மன ஆரோக்கியம் என்பது ஒரு நல்வாழ்வின் நிலை, அதில் ஒரு நபர் தனது சொந்த திறன்களை உணர்ந்து, வாழ்க்கையின் சாதாரண அழுத்தங்களை சமாளிக்க முடியும், உற்பத்தி ரீதியாக வேலை செய்ய முடியும், மேலும் அவரது சமூகத்திற்கு ஒரு பங்களிப்பை செய்ய முடியும்.'

மன ஆரோக்கியம் ''மனநல கோளாறுகள் அல்லது குறைபாடுகள் இல்லாததை விட அதிகம்'' என்று WHO வலியுறுத்துகிறது. உச்ச மன ஆரோக்கியம் என்பது சுறுசுறுப்பான நிலைமைகளைத் தவிர்ப்பது மட்டுமல்லாமல், நடந்துகொண்டிருக்கும் ஆரோக்கியத்தையும் மகிழ்ச்சியையும் கவனிப்பதாகும்.

மனநலத்தைப் பாதுகாப்பதும் மீட்டெடுப்பதும் ஒரு தனிப்பட்ட அடிப்படையில் முக்கியமானது, அத்துடன் உலகெங்கிலும் உள்ள பல்வேறு சமூகங்கள் மற்றும் சமூகங்கள் முழுவதும் அவை வலியுறுத்துகின்றன.

யுனைடெட் ஸ்டேட்ஸில், மனநோய்க்கான தேசிய கூட்டணி ஒவ்வொரு ஆண்டும் 5 பெரியவர்களில் 1 பேர் மனநல பிரச்சினைகளை அனுபவிப்பதாக மதிப்பிடுகின்றனர்.

2017 ஆம் ஆண்டில், யு.எஸ். இல் 11.2 மில்லியன் பெரியவர்கள் அல்லது சுமார் 4.5மூ பெரியவர்கள் கடுமையான உளவியல் நிலையைக் கொண்டிருந்ததாக தேசிய மனநல நிறுவனம் (NIMH) தெரிவித்துள்ளது.

## மன ஆரோக்கியம் பற்றிய வரலாறு

1860 ஆம் ஆண்டிலேயே வில்லியம் எம். கானல் (William M. Connel) என்பவர் வாழ்க்கையில் சுகப்படுவதெப்படி அல்லது உடல் உளச் சுகாதாரம் என்ற பெயருள்ள நூலை வெளியிட்டார். அதன் பிறகு 1907 ஆம் ஆண்டு கிளிப்போர்டு பீர்ஸ் (Clifford Beers) என்பவருக்கு மூளைக்கோளாறு ஏற்பட்டது. தனது உளநோய் நீங்கி நலம்பெற்ற பின்ர் தம் வாழ்நாளை உளநோய்களைக் குணமாக்கும் முறைகளை ஆராய்ந்தார். பல்வேறு அனுபவங்களை ஒருங்கிணைத்து 'தன்னைத்தானே கண்டறிந்த உளம்' (A mind that found itself) என்ற நூலாக வெளியிட்டார். இதுவே உளச் சுகாதாரத்தின் தொடக்கமாகக் கருதப்படுகிறது. இக்காலத்தில் இது குறித்த புரிந்துணர்வு உலகம் முழுவதும் பரவியுள்ளது. அமெரிக்காவில் 6-5-1908 ஆம் ஆண்டு உளச்சுகாதாரத்திற்கென முதல் குழுவை ஏற்படுத்தியது. பின்னர் அது தேசியக் குழுவாக மாறி இது குறித்த விழிப்புணர்வைப் பரப்பியது. 1919 ஆம் ஆண்டு பன்னாட்டுக் குழு நிறுவப்பட்டது. இந்த பன்னாட்டுக் குழுவின் முதற்கூட்டம் 1930 இல் வாசிங்டனில் கூடியது. இக்கூடலில் 53 நாடுகளில் இருந்து பலர் கலந்துகொண்டனர்.

## மன ஆரோக்கியத்தின் முக்கியத்துவம்

புற்றுநோய் நீரிழிவு இதய நோய் போன்ற நோய்களைப் பெற்றுள்ள நோயாளிகளை விட மன நோய்களைப் பெற்றுள்ள நோயாளிகள் அதிகம் என அறியப்படுகிறது. 18 வயதிற்கு மேற்பட்ட அனைத்து அமெரிக்கர்களில் 26 சதவிகிதத்திற்கும் அதிகமான நபர்கள் மனநோய்களால் பாதிக்கப்படுவதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. உலக சுகாதார அமைப்பின் (WHO) அறிக்கையின் படி 2010 ஆம் ஆண்டில் உலகளாவிய மனநோய்க்கான செலவை கிட்டத்தட்ட 2.5 டிரில்லியன் டாலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. இச்செலவு 2030 ஆம் ஆண்டில் 6 டிரில்லியன் டாலர்களை விட அதிகமாகலாம் என கணிக்கப் படுகிறது உலக மக்கள்தொகையில் கிட்டத்தட்ட பாதிபேர் மனநோய்களால் பாதிக்கப்பட்டுள்ளதாக உலகச்சுகாதார நிறுவனத்தின் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதனால் சுயமரியாதைகளிலும் உறவுமுறைகளிலும் அன்றாட வாழ்க்கைக்கான செயல்படும் திறன்களிலும் தாக்கம் ஏற்பட்டு இயல்பு வாழ்க்கை மாறுபடுகிறது ஒரு தனிநபரின் உணர்ச்சி நிலைகளானது அந்த தனிநபரின் உடல் ஆரோக்கியத்தையும் பாதிக்கும் வல்லமைக் கொண்டது. யாரொருவரின் மோசமான மனநிலைகளானது அவரையும் அவரைச் சார்ந்தவர்களையும் தாக்கி சில முக்கியத் தேவைகளில் இடர்களையும் தடைகளையும் உண்டாக்கி முன்னேற்றத்தைத் தடுக்கும். குறிப்பாக போதைப்பொருள் பயன்பாடுகளுக்கும் அவர்களை உட்புகுத்தும் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.






## உள்ளத்தின் வளம்

தம்முடைய பூகோள சமூகச் சூழ்நிலைகளோடு ஒன்றி வாழும் இயல்புடையவர்களை உளம் நலமுள்ளவர்களாகக் கருதலாம். தத்துவ சமூக நிலைகளில் ஒருவருடைய நடத்தை முறைகள் பொருத்தமாக அமைகின்றன என்பதைப் பொறுத்து ஒவ்வொருவரது மனநலம் முடிவு செய்யப்படுகிறது. ஒருவர் தமது ஆளுமையினால் தன்னைச் சுற்றியுள்ள சூழ்நிலையோடு இயைந்து வாழும் போது ஏற்படும் பிரச்சினைகளை நன்கு அறிந்து ஆய்ந்து தெளிந்து சுய அறிவோடு அளவிட்டுப் பார்க்கும் திறனைப் பெற்றிருப்பார். எந்த ஒரு இடையூறுகளையும் வெல்ல வேண்டுமாயின் அவைகளுக்குரிய காரணங்களை தொடக்கத்திலேயே சீர்செய்துவிட வேண்டும். சீர் செய்வதற்கான ஊக்கிகளுடன் (Motives) இணைந்து நிலையான அல்லது திட்டமான மனநிலையை அடைய வேண்டும். இவைகளே ஒவ்வொரு மனிதனிடமும் இருக்க வேண்டிய வாழ்க்கை அடிப்படைத் திறனாகும். 'உன்னை நீயே கட்டுப்படுத்துவதற்காக உன்னை நீயே அறிந்துகொள்' என்பதையே உளச்சுகாதாரம் கற்பிக்கிறது. வில்லியம் ஸ்டெக்கல் என்ற அறிஞர் 'தன்னைத்தானே தெரிந்து கொள்வதே நோய் நீக்கத்தின் தொடக்கமும் முடிவும் ஆகும்' என்கிறார்.

## பாடசாலைகளில் உளச்சுகாதாரம்

இளமையிலேயே நல்ல பழக்கவழக்கங்களைப் பயிற்றுவிக்க வேண்டும். நல்ல பழக்கவழக்கங்களால் திறமையும் முயற்சிச் சிக்கனமும் துன்ப நீக்கமும் வாழ்க்கைச் சிக்கல்களை நீக்குதல் திறனும் ஆற்றலும் இளவயதில் எளிமையாக உண்டாக்கலாம். அமெரிக்காவில் பல இலட்சம் தொடக்கப் பள்ளி மாணவர்கள் உடல் அல்லது உளக்குறைபாடு உடையவர்களாக இருக்கின்றனர். இந்தியா மற்றும் இலங்கை போன்ற ஆசிய நாடுகளிலும் தேர்வுகளில் தோல்வியுற்ற மாணவர்களிடையே தற்கொலை செய்துகொள்ளும் பழக்கம் இருக்கிறது. மணவாழ்க்கையில் பிணக்குக்களும் விவாகரத்துக்களும் ஏற்படுவதற்குக் காரணம் விட்டுக் கொடுக்கும் உளப்பான்மையின்மையும் ஒழுக்கக் குறைபாடுகளும் என அறியப் படுகிறது. விட்டுக்கொடுக்கும் உள்ளப்பான்மையும் சூழ்நிலைக்கேற்ப இயைந்து நடக்கும் திறமையும் இருந்தால் பிணக்குக்களும் வேறுபாடுகளுமே சமுதாயத்தில் தோன்றாது அல்லது குறையும் எனலாம்.

ஆகவே நல் இயல்புகளைக் குழந்தைப் பருவத்திலிருந்தே கற்பிக்கவேண்டும். ஆசிரியர்கள் குழந்தைகளிடம் நல்லியல்புகள் படியும்படி செய்ய வல்லவர்களாய் இருக்க வேண்டும். சமூக அறிவு உள்ளக்கிளர்ச்சிக் குறைபாடுகள் எவ்வாறு ஏற்படுகின்றன என்பதை அறிந்தாலொழிய குழந்தைகளிடம் அத்தகைய குறைபாடுகள் பெருகுவதைப் பெற்றோர்களும் ஆசிரியர்களும் தடுக்கமுடியாது. ஆகவே பெற்றோர்களும் ஆசிரியர்களும் உளச்சுகாதாரத்தில் கவனம் செலுத்த வேண்டும். யுனெஸ்கோ நிறுவனமும் இதையே தனது ஆய்வேட்டில் வற்புறுத்துகிறது.

## மனநல நிலைமைகளுக்கான ஆபத்து காரணிகள்

ஒவ்வொருவருக்கும் வயது, பாலினம், வருமானம் அல்லது இனம் எதுவாக இருந்தாலும் மனநலக் கோளாறு உருவாகும் அபாயம் உள்ளது. யு.எஸ் மற்றும் வளர்ந்த நாடுகளில், மனநல கோளாறுகள் இயலாமைக்கான முக்கிய காரணங்களில் ஒன்றாகும். சமூக மற்றும் நிதி சூழ்நிலைகள், உயிரியல் காரணிகள் மற்றும் வாழ்க்கை முறை தேர்வுகள் அனைத்தும் ஒரு நபரின் மன ஆரோக்கியத்தை வடிவமைக்கும். மனநலக் கோளாறு உள்ளவர்களில் பெரும் பகுதியினர் ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட நிபந்தனைகளைக் கொண்டுள்ளனர். நல்ல மன ஆரோக்கியம் காரணிகளின் நுணுக்கமான சமநிலையைப் பொறுத்தது என்பதையும், வாழ்க்கையின் பல கூறுகளும், உலகமும் பெரிய அளவில் ஒன்றிணைந்து கோளாறுகளுக்கு பங்களிக்க முடியும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

பின்வரும் காரணிகள் மனநல பாதிப்புகளுக்கு பங்களிக்கக் கூடும்.

தொடர்ச்சியான சமூக மற்றும் பொருளாதார அழுத்தம்: மட்டுப்படுத்தப்பட்ட நிதி வழிமுறைகளைக் கொண்டிருப்பது அல்லது ஓரங்கட்டப்பட்ட அல்லது துன்புறுத்தப்பட்ட இனக்குழுவைச் சேர்ந்தவர் மனநலக் கோளாறுகளின் அபாயத்தை அதிகரிக்கும். ஈரானில் 903 குடும்பங்களை 2015 இல் நடத்திய ஆய்வில், வறுமை மற்றும் ஒரு பெரிய நகரத்தின் புறநகரில் வசிப்பது உள்ளிட்ட மனநல சுகாதார நிலைமைகளுக்கு பல சமூக பொருளாதார காரணங்களை அடையாளம் கண்டுள்ளது. மாற்றியமைக்கக்கூடிய காரணிகள், காலப்போக்கில் மாறக்கூடியவை, மற்றும் மாற்ற முடியாத காரணிகள் ஆகியவற்றின் அடிப்படையில் சில குழுக்களுக்கு மனநல சிகிச்சையின் கிடைக்கும் தன்மை மற்றும் தரத்தில் உள்ள வேறுபாட்டை ஆராய்ச்சியாளர்கள் விளக்கினர்.

மனநலக் கோளாறுகளுக்கு மாற்றக்கூடிய காரணிகள் பின்வருமாறு:

சமூகப் பொருளாதார நிலைமைகள், உள்ளூர் பகுதியில் வேலை கிடைக்குமா என்பது போன்றவை தொழில் ஒரு நபரின் சமூக ஈடுபாட்டின் நிலை கல்வி வீட்டு தரம்

மாற்ற முடியாத காரணிகள் பின்வருமாறு:

பாலினம் வயது இனம் இந்த ஆய்வு பாலினத்தை மாற்றியமைக்கக்கூடிய மற்றும் மாற்ற முடியாத காரணியாக பட்டியலிடுகிறது. பெண்ணாக இருப்பது குறைந்த மனநல சுகாதார அபாயத்தை 3.96 மடங்கு அதிகரித்துள்ளது என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்தனர். 'பலவீனமான பொருளாதார நிலை' உள்ளவர்களும் இந்த ஆய்வில் மனநல நிலைமைகளுக்கு அதிக மதிப்பெண் பெற்றனர்.

## உயிரியல் காரணிகள்

சில மரபணுக்கள் மற்றும் மரபணு மாறுபாடுகள் ஒரு நபரை அதிக ஆபத்தில் ஆழ்த்துவதால், மரபணு குடும்ப வரலாறு மனநல நிலைமைகளின் சாத்தியத்தை அதிகரிக்கக்கூடும் என்று ஜேஆர் பரிந்துரைக்கிறது. இருப்பினும், இந்த குறைபாடுகளின் வளர்ச்சிக்கு வேறு பல காரணிகள் பங்களிக்கின்றன. மனச்சோர்வு அல்லது ஸ்கிசோஃப்ரினியா போன்ற மனநலக் கோளாறுக்கான இணைப்புகளைக் கொண்ட ஒரு மரபணு இருப்பது ஒரு நிலை உருவாகும் என்பதற்கு உத்தரவாதம் அளிக்காது. அதேபோல், தொடர்புடைய மரபணுக்கள் அல்லது மனநோய்களின் குடும்ப வரலாறு இல்லாதவர்களுக்கு இன்னும் மனநல பிரச்சினைகள் இருக்கலாம். மன அழுத்தம், மனச்சோர்வு மற்றும் பதட்டம் போன்ற மனநல நிலைமைகள் புற்றுநோய், நீரிழிவு நோய் மற்றும் நாள்பட்ட வலி போன்ற அடிப்படை, வாழ்க்கையை மாற்றும் உடல் ஆரோக்கிய பிரச்சினைகள் காரணமாக உருவாகலாம்.

எனவே சமநிலையற்ற ஏற்றத்தாழ்வுகள் நிறைந்த இந்த உலகில் மன ஆரோக்கியமாக எவ்வாறு வாழலாம் என்பதனைப் பற்றி யாவரும் அறிந்துகொள்ளவேண்டும்.

நவீனத்துவம் அடைந்துவருகின்ற இலத்திரநியல் மயமான இந்த உலகில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் புதிய உத்திகளைக் கையாண்டு பொருளாதார ரீதியாக எவ்வாறு முன்னேறலாம் என்ற சிந்தனையுடன் நகர்ந்துகொண்டிருக்கின்ற உலகில் உள்ள ஒவ்வொருவரும் அதன் விளைவாக உருவாக போகின்ற மனநல பாதிப்புகள் பற்றி கவலை கொள்வதில்லை. குறித்த இலக்கினை அடைந்ததன் பிற்பாடுதான் தான் தற்போது மனநல பாதிப்புக்கும் உள்ளாகி உள்ளேன் என்பதனை அறிந்துகொள்கின்றனர் இதனால் தான் அடைந்த இலக்கின் மகிழ்ச்சியினை அனுபவிக்க முடியாதவர்களாக காணப்படுகின்றார்கள்.

மேலும் தாங்கள் அடைய நினைத்த இலக்கின் உச்ச எல்லையானது தங்களுக்கு கிடைக்கின்ற வெற்றிப் படிகள் மூலமாக படிப்படியாக அதிகரித்துகொண்டே செல்வதனால் மன ஆரோக்கியமும் படிப்படியாக பாதிப்புக்குள்ளாகி உச்ச நிலையினை அடைந்து போதைப் பொருள் பாவனை மற்றும் இதர பாரிய குற்ற செயல்களிலும் மனித குலத்திற்கு எதிரான செயல்களிலும் அவர்களை ஈடுபட வைப்பதனைக் காணலாம்.

ஆகையால் முடிவற்ற ஆசைகளாலும் தொடரான கவலைகளாலும் கட்டுப்பட்ட அல்லது வயப்பட்ட நாம் எச்செயல் செய்கின்றபோதும் அச் செயலால் மன ஆரோக்கியத்திற்கு எக்கேடும் ஏற்படாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும் இதுவே எம்மையும் நாம் வாழ்கின்ற இந்த சமமற்ற உலகையும் நல்வழிக்கு இட்டுச் சென்று இப்பூவுலகை ஒரு நிஜமான அமைதிப் பூங்காவாக உருவாக்கும் என்பதில் ஐயமில்லை.

**ஏ.கங்காதரன்**
**B'Com, MBA, Dip in Psychology & Cancelling (MIU)**
**kangatharan@gmail.com**



# தற்காலத்தில் மாணவர்களைப் பாதிக்கும் சமூக, பொருளாதார காரணிகள்

இலங்கைத் திருநாடானது தெற்காசியாவிலே 92ூ என்கின்ற உயர் எழுத்தறிவு வீதத்தினைக் கொண்டு முன்னிலையில் மிளிர்கின்றதொரு நாடாகும். இது மூன்றாம் உலக நாடொன்றிடமிருந்து எதிர்பார்க்கப்படுவதை விட அதிகமானதாகும். இந் நிலமைக்கான அடித்தளம்; C.W.W கன்னங்கராவினால் இடப்பட்ட இலவசக்கல்வி முறையினைச் சாரும். இன்று இவ்வாறான இலவசக் கல்வியினை சிதைப்பதற்கு பல்வேறான முயற்சிகள் அடிக்கடி மேற்கொள்ளப்பட்டாலும் இவை கல்விச் சமூகத்தினரின் பாரிய எதிர்ப்பினால் அவ்வப்போது காணப்படும் அரசுகளால் கைவிடப்படுவதைக் காணலாம்.

தற்போதைய COVID தொற்றுக்காலத்தில் பாடசாலைகளால் நிகழ்த்தப்படும் இணைய வழிமுறையிலான கற்பித்தல் முறையும் இலவசக் கல்வி என்பதை மறக்கச் செய்யும் செயற்பாடாகவே பார்க்கப்பட வேண்டியதொன்றாக அமைகிறது எனலாம். காரணம் இடிணையப் பாவனைக்கு மாணவர்கள் செலவழிக்கும் பணத்தினைப் பார்க்கும்போது அது தெட்டத் தெளிவாகிறது. உயிரற்ற கருவி மூலமாக உயிரோட்டமான கற்றல் - கற்பித்தல் இடம்பெறுகின்றது. ஆனால் இந்நிலை கல்விச் சமத்துவத் தன்மையினையும் சீரழித்து நிற்பது கண்கூடு.

இவ்வாறாக இன்றைய அசாதாரண நிலையில் பல்வேறான தொழிநுட்பங்களுக்கூடாக கற்றல் - கற்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் இது சமத்துவமான கல்வி என்ற கொள்கைக்கு அமைய இடம் பெறுவதென்பது கேள்விக்குறியே. குறிப்பாக கல்வி அமைச்சின் தரவுப் பகுப்பாய்வுகளுக்கு அமைய 60ூ ஆன மாணவர்கள் இணையவழிக் கல்வி முறைகளுக்கு இன்னமும் இணைக்கப்படவில்லை எனக் குறிப்பிடுகின்றது. அவ்வாறாயின் அம் மாணவர்கள் சமத்துவமான கல்விக்கு விதி விலக்கானவர்களாக அமைவர். இந் நிலமைக்கு அம் மாணவர்களின் பொருளாதார நிலை பெரும்பான்மைக் காரணமாக அமைந்துள்ளது. ஆகவே இவர்களுக்கான மாற்று மீலைத்திட்டங்கள் தற்போது வலயக்கல்வி அலுவலகங்களால் மேற்கொள்ளப்படுகின்றமை வரவேற்கத்தக்கதாகும்.

இலங்கை அரசு மூலமாக நாடு முழுவதிலுமுள்ள அரச பாடசாலைகளில் ஒரே மாதிரியான கலைத்திட்டங்களுடனும் எவ்வித வேறுபாடுகளுமின்றி இலவசக் கல்வி நடைமுறைகள் வழங்கப்பட்டாலும்; மாவட்டங்களுக்கிடையிலான கல்வித்தரத்தில் பல ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன. குறிப்பாக பொழும்பு, கம்பஹா போன்ற பொருளாதார பலமுடைய மாவட்டங்களையும் மட்டக்களப்பு, மொனராகலை, முல்லைத்தீவு போன்ற குறை வருமானமுடைய மாவட்டங்களையும் ஒப்பு நோக்கும்போது அவற்றின் கல்வி வெளிப்பாடுகள் பொருளாதார மட்டத்திற்கும் கல்விக்குமிடையிலான தொடர்பை வெளிப்படையாகக் காட்டும் நிலையாகி விடுகிறது.

அந்த வகையில் பொருளாதார ரீதியிலான ஏற்றத்தாழ்வுகள் கல்வியின் சமத்துவ நிலையினை பாதிப்பதனை உலக நாடுகளின் எழுத்தறிவு ரீதியிலான புள்ளி விபரங்களினை அவதானிக்கும்போது உணர்ந்து கொள்ளலாம். 2017 இல் வெளியிடப்பட்ட ஐக்கிய நாடுகளின் மனித அபிவிருத்தி உலக அறிக்கையினை நோக்குகையில், ஆபிரிக்க நாடுகளான நைஜீரியா, கொங்கோ, சம்பியா, கோட்டிபொய், செனகல், தன்சானியா(14.4%), பெனின், உகண்டா, எரித்திரியா, மாலவி, ருவண்டா, மாலி(19%), சாட், புருண்டி(12.8%) ஆகிய 24 நாடுகளில் மிகவும் தாழ் மட்டத்திலான பொருளாதார வளர்ச்சியும், தாழ் எழுத்தறிவும் காணப்படுவது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதேவேளை ஐரோப்பிய, ஐக்கிய அமெரிக்க கண்ட நாடுகளில் பொருளாதார நிலையும், எழுத்தறிவும் உயர் நிலையிலுள்ளன. ஆகவே பொருளாதார ரீதியிலான பலமற்ற தன்மையும் சமூக ரீதியிலான பிரச்சினைகளும் மாணவர்களை பெரிதும் பாதிப்பதாக அமைகின்றன எனலாம்.

உலக நாடுகளில் இந் நிலை இவ்வாறு அமைய இலவசக் கல்வியினை வழங்கும் இலங்கையின் கல்வியிலும் சமத்துவமின்மை காணப்படுகின்றது. குறிப்பாக வறுமை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் வறுமை மிகவும் கூடிய மாவட்டங்களாகக் கருதப்படும் மட்டக்களப்பு, மொனராகலை, முல்லைத்தீவு ஆகியவற்றில் மாணவர்களின் கல்விக்குத் தடையான பல காரணிகள் குறிப்பிடப்பட்டன. அவற்றில் பெற்றோரின் பொருளாதார ஸ்திரமற்ற தன்மை பெரிதும் செல்வாக்குச் செலுத்தியது. இப் பிரதேசங்களில் நகர மக்களின் வாழ்க்கை மாணவர்களின் கல்விக்கு நேர் நிலையானதாகக் காணப்படும் அதேவேளை கிராம மக்களின் வாழ்வு கல்வியை அதிகமானோருக்கு எட்டாக்கனியாக்கி விடும் நிலையிலுள்ளமையும் எடுத்துக் காட்டப்பட்டது. விவசாயம் செய்யும் போகங்களில் மாணவர்கள் பாடசாலைக்கு வருவதை விட தனது தந்தைக்கு உதவியாக வயல்களுக்குச் செல்லும் நிலை இங்கு காணப்படுகின்றது. இதை விட கோவில் திருவிழாக்கள் என்றால் மாணவர் வரவு மிகவும் மோசமாகும்.

இவற்றை விட முக்கியமான பிரச்சினையொன்றும் ஆய்வுகளின் மூலம் வெளிப்பட்டது. அதாவது கிராமத்திலிருந்து பாடசாலைகளுக்குள்ள தூரம் காட்டப்பட்டது. அதாவது பல மாணவர்கள் இவ்வாறான அதிக தூரத்தின் காரணமாக போக்குவரத்திற்காக அதிக பணம் செலவழிக்க வேண்டிய நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளனர். இதனால் பெற்றோர் மாணவர்களை பாடசாலைகளுக்கு அனுப்பாமல் விடுகின்றனர். இதனால் இடைவிலகல், வரவின்மை போன்ற நிலைகள் உருவாகின்றன.

வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் ஆய்வுத் தரவுகளின் படி இலங்கையில் உள்ள 10165 பாடசாலைகளில் 9792 (96.3%) பாடசாலைகள் மாகாணப் பாடசாலைகளாக அமைவதுடன் இவற்றுக்கு ஒதுக்கப்படும் நிதி தேசிய பாடசாலைகளுடன் ஒப்பிடும்போது குறைவாகும். அத்தோடு வளப்பரம்பலும் அவ்வாறே. இவ்வாறாக புவியியல், சமூகம் மற்றும் பொருளாதார ரீதியிலான காரணங்களும் மாணவர்களின் கல்வியைப் பாதிப்பதாக அமைகின்றன.

கிராமப் புறங்களில் பிற்போக்கான பெண்ணியல்வாதக் கருத்துக்களும் சமத்துவமற்ற தன்மையினைக் கல்வியில் காட்டுவதாக அமைகின்றன. குறிப்பாக பெண்கள் பாடசாலைக்குச் செல்வதும் உயர் கல்வியைக் கற்பதும் சமூகத்தால் எற்றுக்கொள்ளப்படுவதாக



வில்லை. குறிப்பாக தரம் 9 வரை கற்றால் போதும் என்ற மனநிலையில் அத்தகு பெற்றோர் காணப்படுகின்றனர். இது பால்நிலை சமத்துவமின்மைக்கு வித்திடும் செயலாகும். இதில் மற்றுமொரு காரணமும் பெரும் தாக்கத்தினை உண்டு பண்ணுவதாக அமைகின்றது.

குடும்பத்தில் போதைப் பழக்கத்திற்கு அடிமையாகியுள்ள தந்தையின் செயற்பாட்டினாலும், அதன் விளைவாக ஏற்படும் குடும்ப வறுமை காரணமாகவும் தாய்மார் வெளிநாடுகளுக்கு பணிப் பெண்களாகச் சென்று வருமானமீட்ட துணிந்து செல்கின்றனர். இந் நிலை பாடசாலை செல்லும் பிள்ளைகளை கடுமையாக பாதிக்கும் செயலாகும். குறிப்பாக இந் நிலையில் பிள்ளையினை பராமரிப்பவராக அம்மம்மா, அப்பம்மா போன்றோர் காணப்படுவர். இவர்கள் எந்தளவுக்கு தாயின் அன்பு, அரவணைப்பினை வழங்குவார்கள் என்பது சந்தேகமே. தந்தையின் செயற்பாடு வேறு திருமணம் வரை செல்வதாக ஆய்வுத் தரவுகள் தெரிவிக்கின்றன. அத்தோடு மூத்த பிள்ளைகள் தமது தம்பி, தங்கைகளை பராமரிப்பதற்கு முழு நேரங்களை செலவிடும் தன்மையும் கண்டறியப்பட்டுள்ளது. இந் நிலமை பிள்ளையில் உளவியல் ரீதியான தாக்கங்களை உண்டு பண்ணுவதுடன் கற்றல் அடைவினையும் பாதிப்பதாக அமைந்து விடும்.

ஏப்பிரகாம் மாஸ்லோ குறிப்பிட்டதனைப் போன்று அன்பு, அரவணைப்பு இவற்றுக்கு மேலதிகமாக பாதுகாப்புத் தேவை பிள்ளைக்கு வழங்கப்படும்போதே அவன் கற்றலுக்கு தூண்டப்படுவான் எனக்குறிப்பிட்டார். ஆனால் பிள்ளைகளுக்கு மேற் குறிப்பிட்ட நிலமையில் அவை ஏதும் கிடைக்காது. இது பிள்ளையில் நேரடித் தாக்கத்தினை உண்டு பண்ணும் செயற்பாடாகிவிடும்.

கனடாவின் Cape Breton University மேற்கொண்ட ஆய்வில் இளவயதுத் திருமணம் தொடர்பாக கூறப்பட்ட கருத்தை இங்கு நோக்குவது சாலச் சிறந்தது. அதாவது இளவயதுத் திருமணத்திற்கு தூண்டப்படும் பிள்ளைகள் பாடசாலைக் கல்வியை இடையில் முடித்தவர்களாகவும், சிறுவயதில் பெற்றோரின் அரவணைப்பினை இழந்தவர்களாகவும், அநாதைகள் காப்பகத்தில் இருந்து வெளியேறியவர்களாகவும் அமைந்தமையினை சுட்டிக் காட்டியது. அந்த வகையில் இலங்கையிலும் பின்தங்கிய பிரதேசங்களில் இளவயதுத் திருமணத்திற்கு இத்தகு காரணங்கள் துணை நிற்பதையும் காண முடிகின்றது.

அடுத்து போசனைக்குறைபாடு என்பதும் மாணவர்களை பாதிக்கும் ஒரு காரணியாகிறது. பசி வந்தால் பத்தும் பறக்கும் என்பார்கள். அதற்கு கல்வி ஒரு விதிவிலக்கல்ல. காலைக் கூட்டங்களில் பின் தங்கிய பிரதேசப் பாடசாலைகளில் மயங்கி விழும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாகும். இதற்குப் பெற்றோரின் பொரளாதார நிலை, வாழ்க்கைத் தரம் மற்றும் சமூக பொருளாதார அபிவிருத்தி என்பன காரணங்களாக அமைகின்றன. இலங்கையில் நுவரெலியா, பதுளை, திருகோணமலை. மட்டக்களப்பு போன்ற மாவட்டங்களில் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும்போது அதிகளவு போசனைக் குறைபாடுடைய பிள்ளைகள் இனங்காணப்பட்டுள்ளனர். குறை வருமானத்தினால் பசிக்கு உண்பதை விட போசாக்கிற்காக உண்பது அவர்களின் தேவையாகவிருப்பதில்லை எனலாம்.

மற்றுமொரு மாணவர்களைப் பாதிக்கும் பாரியதொரு இடராக அமைவது ஆசிரியர் பற்றாக்குறையாகும். குறித்த பாடத்திற்கான ஆசிரியர் குறித்த பாடத்தினை கற்பிக்கும்போது மட்டுமே கற்பித்தல் ரணமடையும். அவ்வாறில்லையேல்; மாணவர்கள் குழப்பமடையும் நிலைக்குத் தள்ளப்படுவர். இதனால் அவர்களின் அடைவும் பாதிக்கப்படும். அதி க;டப் பிரதேச பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் செல்ல விரும்புவதில்லை. சென்றாலும் ஏதோவொரு காரணத்தைக் காட்டி நகரப் பகுதிகளுக்குச் சென்று விடுவர். இந் நிலையில் பல கிராமப் புறப் பாடசாலைகள் இன்றும் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், சிங்களம், அழகியற் கலைப் பாடங்கள் என்பவற்றைக் கற்பிக்க ஆசிரியர்கள் இல்லாமல் தடுமாறுகின்றன. இதனால் மாணவர்களில் குறித்த பாடம் தொடர்பாக விருத்தியடைய வேண்டிய திறன்கள் மழுங்கடிக்கப்பட்டு மாணவன் பாடசாலைக் கல்வியிலிருந்து விடுபட வாய்ப்பை ஏற்படுத்துவதுமாகிவிடுகிறது.

அடுத்து இன்றைய அசாதாரண காலப்பகுதியில் மாணவர்களுக்கான கற்பித்தற் செயற்பாடுகள் நிகழ்நிலைக் கற்பித்தலினடிப்படையில் இணையமூடாக கற்பிக்கப்பட்டு வருகின்றது. பாடசாலைகள் எப்போது ஆரம்பமாகும் என்பது தொடர்பில் ஊகிக்க முடியாத நிலை காணப்படும் இச் சந்தர்ப்பத்தில் கிட்டத்தட்ட நான்கரை இலட்சம் மாணவர்களும் அவர்களது பெற்றோர்களும், இரண்டரை இலட்சம் ஆசிரியர்களும் ஏனைய கல்விச் சேவை உத்தியோகத்தர்களும் என முழுச் சனத்தொகையில் நான்கில் ஒரு பங்கினர் கல்வி நடவடிக்கைகளில் சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளனர். இந் நிலையில் தகவல் தொழிநுட்பத்தினூடாக Whats – up , Zoom, Google Forms, Youtube போன்ற செயலிகள் மூலம் கற்பித்தல் நடைபெறுகின்றது. இந் நிலை மாணவர்களுக்கு தொழிநுட்ப ரீதியான பல சிக்கல்களை கொண்டுவருவதாக அமைகின்றன.

இவ்வாறான நவீன தொழிநுட்ப சாதனங்கள் மூலமான கற்பித்தலை மேற்கொள்வதற்கான அறிவு மாணவர்களிடமும் பெற்றோர்களிடமும் உள்ளதா என்பது பெரிதும் கேள்விக்குறியே. அத்தோடு அதற்கான சாதனங்களும் இருப்பதும் சந்தேகமே. இலங்கையின் கணணி அறிவு வீதமானது நகர்ப்புறங்களில் 39.2% ஆகவும், கிராமப் புறங்களில் 25.5% ஆகவும் மலையகத்தில் 9ூ ஆகவும் காணப்படுகின்றது. UNICEF இன் ஆய்வுகளின் படி இலங்கையில் பால் ரீதியாக, புவியியல் ரீதியாக, சமூக பொருளாதார ரீதியாக கணணியைப் பயன்படுத்துவதில் ஏற்றத்தாழ்வுகள் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டது. இந் நிலை இன்றைய கற்றல் சூழலை பெரிதும் பாதிக்கின்றது.

சாதாரணமாக குடும்ப அலகில் ஆண் பிள்ளைகளுக்கு கணணி மற்றும் Smart Phone பாவிக்க விடும் தன்மை பெண் பிள்ளைகளுக்கு மறுக்கப்படுகின்றது. சில கிராமங்கள் இன்னமும் ஒரு கணணிகூட இல்லாத நிலையில் காணப்படுகின்றன. இது ஒரு பக்கமிருக்க இணைய சேவை வழங்குநரின் Coverage இன் வேகம் இடத்திற்கிடம் ஏற்ற இறக்கமே. நாட்டில் 7 கட்டண இணைய சேவை வழங்குநர்கள் (ISP) காணப்படுகின்றனர். கிராமங்களில் இணைய அணுகலுக்கான வீச்செல்லை மிகவும் வேகம் குறைவானது. இதனால் இவர்கள் விரைவான அணுகலை இழப்பதுடன் கற்றல் – கற்பித்தலில் தொடர்பாடலை மேற் கொள்வதில் சிரமப்படுகின்றமை இங்க சுட்டிக்காட்டத்தக்கது.

இன்றைய இணையவழிக் கற்பித்தலால் மாணவர்கள் குழப்பமடையும் மனநிலைக்கும் தள்ளப்பட்டள்ளனர். குறிப்பாக ஒவ்வொரு பாடசாலைகளும் தரம், பாடம் என்பவற்றுக்கு ஏற்ப Whats - up குழுக்களை உருவாக்குகின்றன. இதை விட கல்வி வலயங்கள் மூலமாக உருவாக்கப்படும் குழுக்கள், தனியார் கல்வி நிலையங்கள் மூலமான குழுக்கள் என்பனவாலும் மாணவர்களின் குழுக்கள் பலவகைப்படும். உதாரணமாக க.பொ.த சாதாரண தரம் கற்கும் ஒரு மாணவனிடம் மெற்கொள்ளப்பட்ட நேர் காணலில் பெறப்பட்ட விடயங்கள் பின்வருமாறு. தனது பிரதான 9 பாடங்களுக்கும் 9 குழுக்களும், வலயத்தினால் பாடரீதியாக உருவாக்கப்பட்ட 9 குழுக்களும், தனியார் கல்வி நிலையத்தின் 5 குழுக்களுமாக மொத்தம் 23 Whats - up குழுக்களில் தான் அங்கம் பெறுவதாகவும் இக் குழுக்கள் அடிக்கடி வழங்கப்படும் குறிப்புக்கள், வீடியோக்கள் மூலம் நிரம்பி வழிவதாகவும் Zoom Class, Online Exam என்பன நடைபெறும்போது எதில் இணைவது என்று குழம்பியே தமது காலம் கழிவதாக அவர் குறிப்பிட்டார். இதுதான் அநேக மாணாக்கரின் நிலை.

இவ் இடைவெளியினை குறைப்பதற்கு இலங்கை அரசினால் தொலைக்காட்சி நிகழ்ச்சி மூலமாக கற்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் அதிலும் தடைகள் இல்லாமலில்லை. வடக்கு கிழக்குப் பகுதிகளில் தேசிய தொலைக்காட்சிகளை பார்ப்பதை விட இந்திய தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை பார்ப்பவர்களின் எண்ணிக்கை வீதம் உயர்வாகும். இந் நிலையில் தேசிய தொலைக்காட்சி மூலமாக இவர்கள் எப்படி கற்க முனைவார்கள்.

மேற்காட்டிய நடைமுறைகளில் இணையாமலிருக்கும் பிள்ளைகளை கவனியாமல் பொதுப் பரீட்சைகளை நடாத்த முடியுமா? அவ்வாறாயின் அது கல்வியின் சமத்துவத்தினை பாதிப்பதாகிவிடுமே. ஆகவே பாடசாலைகள் திறக்கப்பட்ட பின்னர் விடுபட்ட பாடத்திட்டங்களை முடிப்பதற்கான கால அவகாசங்களை வழங்கியும், பாடத்திட்டங்களை குறைத்தும் பரீட்சைகளை வைக்க முடியுமாயின் அது மாணவர்களை பாதிக்காத செயலாகிவிடும். பரீட்சைக்கான உத்தேச திகதிகள் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளன. க.பொ.த உயர்தரப்பரீட்சைகள் நவம்பரிலும், க.பொ.த சாதாரண தரப் பரீட்சைகளை பெப்ரவரியிலும், புலமைப்பரிசில் பரீட்சையினை நவம்பரிலும் நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது. இந்நிலை மாணவர்களில் பதட்டத்தினையும் உளரீதியான சிக்கல்களையும் உண்டு பண்ணுவதாகின்றது.

இவ்வாறான தற்கால நிலையில் பல்வேறான சிக்கல்களுடன் மாணவர்கள் தமது கற்றல் நடைமுறைகளைக் கொண்டு செல்கின்றனர். ஆகவே மாணவர்கள் சார்பான நடைமுறைச் சாத்தியமான பல்வேறான திட்டங்கள் சமூக, பொருளாதார ரீதியாக அரசினால் வடிவமைக்கப்பட்டு செயற்படுத்தப்படுவதன் வாயிலாக இப் பிரச்சினைகளை ஓரளவுக்கேனும் குறைத்து கொள்ள முடியும் என்பது வெளிப்படை.

வி.விஜயரூபன்
விரிவுரையாளர்,
தேசிய கல்வியியற் கல்லூரி
மட்டக்களப்பு.


நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com


SAYENTHIRAN KATHIR
Geschäftsführer
S TRAVEL
Flugtickets | Hotels | Reiseversicherungen
Luisenstr 21 8005 Zurich | info@stravel.ch www.stravel.ch
044 419 91 00 079 913 77 59


"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமுகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206


கிழக்கிலங்கையின் காரைதீவில் வெளிநாட்டு
துரித பொதிகள் சேவையில் புதிய பரிணாமம்
வெளிநாட்டில் இருக்கும் உங்கள்
உறவுகள் நண்பர்களுக்கு பொதிகள்
மற்றும் ஆவணங்களை துரித
வேகத்தில் உரிய முகவரியில்
கொண்டு சேர்க்க
இன்றே நாடுங்கள்
TA parcel.lk
LOCAL & INTERNATIONAL COURIER SERVICE
TA ENTERPRICES & CO வின்
TA PARCEL.LK
துரித வேகம். London, Swiss, France, Canada 3 Days Only) Quick Service
உலகின் எப்பாகத்திற்கும் பொதிகள் அனுப்பும் வசதி. All Countries
பொதிகள் முழு (100%) காப்புறுதி செய்யப்படுகின்றது. 100% Insured
365 நாட்கள் 24 மணி நேர வாடிக்கையாளர்கள் சேவை. 365 Days 24 Hours Service
உரிய முகவரியில் கொண்டு சேர்க்கப்படும். Door to Door Delivery
இணையத்தளம் மூலம் உங்கள் பொதிகள் எங்கு உள்ளது என கண்டறியும் வசதி. Online Tracking System
சிறந்த பொதியாக்கம். Quality Packing
நீங்கள் பொதிகள் ஒப்படைக்கும் போதே Traking Number வழங்கப்படும்.
இவ்வாறான நம்பகதன்மைகளுடன் உங்கள் உறவுகளின் எதிர்பார்ப்புகளை கொண்டு சேர்க்கின்றோம்.
எங்கள் நிறுவனத்தின் ஊடாக பொதிகள் அனுப்பும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும் பெறுமதியான பரிசில்கள் மற்றும் அன்பளிப்புகள் காத்திருக்கின்றது.
அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு விசேட விலைக்கழிவு.
வெளிநாடுகளில் இருந்து அனுப்பப்படும் பொதிகளையும் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
TA PARCEL.LK | Main Street Karaithivu | taparcel.lk@gmail.com, +94774385151, +94752542651


உதயகுமார் கல்வி நிலையம்
முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com


SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28
வீட்டுக்கடன்
0.62%
தொடக்கம்
10% இல்
சொந்த வீடு கட்ட
அல்லது வாங்க
இருக்கும் வீட்டை வைத்து
இன்னொரு வீட்டை வாங்க...
வீடு வாங்க. விற்க, கட்ட, திருத்த...
வீடு வாங்குவதற்கான
ஆயுட்காப்புறுதி
Architect வேலைகள்
இலங்கையில் வீடுகள், காணிகள்,
விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக
வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து
கொண்டே செய்யலாம்.
» கிறங்கன்காசே
» ஆயுட்காப்புறுதி
» பயணக்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி


GRÜNAU 1
# ITALY # INDIAN # THAI # SRILANKA
Fruhstuck / Mittagessen / Abendessen
Öffnungszeiten
Montag - Sonntag
08:00AM - 22:00PM
ORDER NOW
TANDOORI
FISH SPL
BBQ GRILL
BIRIYANI SPL
CURRY GERICHTE
MIX SABJI DESERTSLIEF
CALL for FREE DELIVERY
044 260 2222 079 563 2222
Meierwissenstr 58, 8064 Zürich
www.grunau1restaurant.com

# இ.கி.மிசனின் நிவாரணப்பணி கண்டிக்கும் விஸ்தரிப்பு



(வி.ரி.சகாதேவராஜா)

ராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்புக்கிளை தனது நிவாரணப் பணிகளை கண்டிக்கும் விஸ்தரித்துள்ளது.

ஏலவே, கடந்தவாரம் மன்னார் மாவட்டத்திற்கும் இம்மனிதாபிமான நிவாரணப்பணி விஸ்தரிக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே.

கண்டி மாவட்டத்தில் உள்ள கலேகல மற்றும் லவந் எஸ்டேட் என்னும் பகுதிகளில் நேற்றுமுன்தினம் ஒருதொகுதி உலருணவு நிவாரணம் வழங்கப்பட்டது.

ராமகிருஸ்ணமிசனின் மட்டு மாநில மேலாளர் ஸ்ரீமத் சுவாமி தக்ஷயானந்த ஜீ மஹராஜ் உதவி மேலாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்த ஜீ மஹராஜ் ஆகியோரின் ஒழுங்கமைப்பில் இவ்வுலருணவு நிவாரணம் வழங்கப்பட்டது.

அப்பிரதேசங்களிலுள்ள பாதிக்கப்பட்ட 150 குடும்பங்களைச் சார்ந்த 675 பயனாளிகளுக்கு சுமார் 2லட்சத்து 15ஆயிரம் ருபா செலவில் நிவாரணப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

ஏலவே மிசனின் பணிகள் மன்னார் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.




# தமிழ் மொழிப் பாடசாலைகள் பல்வேறு குறைபாடுகளுடன் இயங்கி வருகின்றது

## இராஜாங்க அமைச்சர் பியால் நிசாந்த டி சில்வா

(இஃஜாஸ் ஏ பரீட் , எம்.ஏ.முகம்மட்)



மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, அறநெறிப் பாடசாலைகள், கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த டி சில்வா - மற்றும் திருகோணமலை மாவட்ட மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கபில நுவான அத்துக்கோரள ஆகியோர் திருகோணமலை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கு விஜயம் செய்து பாடசாலைகளில் கணனி ஆய்வுக் கூடங்களை திறந்து வைத்தனர்.

அதில் ஒரு கட்டமாக திருகோணமலை பேராறு தி/கந்தளாய் பரமேஸ்வரா வித்தியாலய கணனி ஆய்வுக்கூடத்தையும், மற்றும் ஆயிஷா மகாவித்தியாலயத்தின் கணனி ஆய்வுக் கூடத்தினையும் இராஜாங்க அமைச்சர் பியால் நிசாந்த டி சில்வா திறந்து வைத்தார்.

இராஜாங்க அமைச்சர் இங்கு கருத்து தெரிவிக்கையில்

நான் ஒரு ஆசிரியர் என்ற வகையில் எனக்கு ஆசிரியர்களை பற்றி நன்றாக தெரியும் அதனால் நான் கல்விச் சேவையினை பொறுப்பெடுத்த பின்னர் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

பிள்ளை நேயப் பாடசாலையின் பல வேலைத்திட்டத்திற்காக பல்வேறு நிதியினை ஒதுக்கி இருந்தோம்.

அதிமேதகு ஜனாதிபதியின் விசேட திட்டமாக காணப்படுவது நாடு முழுவதும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தேசிய பாடசாலை உருவாக்குவதே ஆகும் .

தற்போது ஏற்பட்டிருக்கின்ற கல்வியில் போட்டியை கண்டு மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் சவால்களை எதிர் நோக்குகின்றனர்.

அவர்களுடைய சுகதுக்கங்களை அறிந்து ஜனாதிபதி இவ்வாறான முடிவொன்றினை மேற்கொண்டுள்ளார்.

நாம் விசேடமாக தமிழ் மொழிப் பாடசாலைகளுக்கு விசேட கவனம் செலுத்தி வருகின்றோம். ஏனெனில் நான் சென்று பார்த்த பல தமிழ் மொழிப் பாடசாலைகளிலே பல குறைபாடுகள் காணப்படுகின்றது.

உங்களுடைய பெற்றோருடன் நீங்கள் விருப்பமானக இருக்கிறீர்கள அது போன்று நீங்கள் ஆசிரியர்களுடன் அன்பாகவும் கௌரவமாகவும் நடந்து கொள்ள வேண்டுமென இந்த மாணவச் செல்வங்களிடம் நான் கேட்டுக் கொண்டிருப்பது போன்று உங்களுடைய எதிர்காலத்திற்காக நீங்கள் நன்றாக கல்வி கற்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கின்றேன் என்றார்

இதற்கான நிதியுதவினை பாகிஸ்தான் நாட்டின் தூதரகம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# புனித மீலாதுன் நபி விழாவை முன்னிட்டு கல்முனையில் மேலித் மஜ்லிஸுௗம் கோடியேற்றம்





( நூருல் ஹுதா உமர்)


நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பிறந்த தினமான புனித மீலாதுன் நபி விழாவை முன்னிட்டு வருடா வருடம் கல்முனை தாருஸ்ஸபா அமையத்திலும், சாய்ந்தமருது சற்குரு மகாம் ஷாவியதுல் வாஹிதிய்யா வ ஹல்லாஜியாவிலும் நடைபெறும் மௌலித் மஜ்லிஸுௗம் கொடியேற்றமும் இம்முறையும் கடந்த வியாழக்கிழமை மாலை தாறுஸ்ஸபா அமையத்தின் தவிசாளர் உஸ்தாத் சபா முஹம்மத் தலைமையில் கல்முனையிலும், சாய்ந்தமருது சற்குரு மகாம் தலைவர் எம்.எம்.எ.ஜப்பார் தலைமையில் சாய்ந்தமருதிலும் நடைபெற்றது.

வழமையாக வெகுவிமர்சையாக நடைபெறும் இந்நிகழ்வு இம்முறை கொரோனோ தொற்று காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட சிலருக்கு மாத்திரமே சுகாதார நடைமுறைகளை பேணி அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

மௌலவிமார்களின் மௌலித் முழக்கத்துடன் நிகழ்வின் பிரதம அதிதி அஸ்ஸெய்யித் மக்கத்தார் அப்துல் மஜீத் கலீபத்துல் ஹல்லாஜ் அவர்களினால் கொடி ஏற்றி வைக்கப்பட்டது. இந் நிகழ்வில் சாய்ந்தமருது சற்குரு மகாம் செயலாளர் ஏ.சி.எம். நிஸார், உட்பட நிர்வாகிகள், தாறுஸ்ஸபா அமையத்தின் முக்கியஸ்தர்கள், நிர்வாகிகள் என பலரும் சுகாதார நடைமுறைகளை பேணி கலந்து கொண்டனர்

# முஸ்லிங்களை கறிவேப்பிலையாக மாற்றும் அவலம் உருவாகியுள்ளது

## ஏ.எல்.எம். அதாஉல்லா



(நூருல் ஹுதா உமர்)

இந்த நாடு உலகில் உள்ள பலருக்கும் தேவைப்பட்டதனால் பல காலங்கள் யுத்த ரீதியாக அடிமைப்படுத்தி பின்னர் மீண்டு போனாலும் கூட தொடர்ந்தும் காலா காலமாக பல பிரச்சினைகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. விடுதலைப் புலிகள் என்ற பெயரிலும் இன்னும் எத்தனையோ பெயர்களை கொண்ட ஆயுதக்குழுக்களின் பெயரிலும் நடத்தப்பட்ட யுத்தம் விடுதலைக்கான யுத்தமல்ல. இதுவிடயம் தொடர்பில் பேச யாராவது தயாராக இருந்தால் அவர்களுக்கு முகம் கொடுக்க நாங்கள் தயாராக உள்ளோம். இன்றும் முஸ்லிங்களே கறிவேப்பிலையாக பயன்படுத்தப்பட்டுள்ளார்கள். கிறிஸ்தவ தேவாலயத்தில் குண்டுவீச முஸ்லிம் உலமா என்ற பெயரில் அவர்கள் பாவிக்கப்பட்டு முஸ்லிங்கள் மீது பயங்கரவாதிகள் எனும் முத்திரை குத்தப்பட்டிருப்பதும் இந்த நாட்டின் சொத்துக்களையும், வளங்களையும் கொள்ளையடிக்கவே தவிர வேறில்லை என்பதை நாம் அறிந்து கொள்ளாமல் இருக்க முடியாது என தேசிய காங்கிரஸின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம். அதாஉல்லா தெரிவித்துள்ளார்.

அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி தேசிய பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டு 29 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு சர்வதேச ஆசிரியர் தினத்தன்று கல்லூரியின் அதாஉல்லா கேட்போர் மண்டபத்தில் தேசிய பாடசாலை தின விழா கொண்டாடப்பட்ட போது அந் நிகழ்விற்கு பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் தொடர்ந்து உரையாற்றிய அவர்,

கல்வியில் மிகமுக்கியமான கல்வி நாம் ஏன் படைக்கப்பட்டோம் என்பதை அறிந்துகொள்ளும் கல்வியே. இன்றைய காலங்களில் நாம் என்ன பட்டங்களை, பதவிகளை பெற்றாலும் மனங்கள் தூய்மையாக்கப்படாமல், எண்ணங்கள் சீராக இல்லாமல் இளைஞர்கள் வெவ்வேறு திசைகளில் திசைமாற்றப்பட்டு வருகிறார்கள். உலமா என்ற பெயரில் ஸஹ்ரான் பாவிக்கப்பட்டிருக்கிறார். வரலாறுகளை பின்னோக்கி பார்க்கின்ற போது இந்த நாடு அழகும், செழிப்பும் நிறைந்த நாடு. இந்த நாட்டில் தான் இஸ்லாமியர்கள் நம்பும் நபி ஆதம் (அலை) இறக்கப்பட்டார். இந்த மண் வரலாற்றில் மறக்கமுடியாத வளங்களையும், பண்புகளையும் கொண்ட மண்.

காய்த்த மரத்திற்கே கல்லெறி என்பது போல இந்த நாடு வளங்களினால் காய்த்த மரம். இந்த நாட்டில் உள்ள வளம் வேறு நாடுகளில் காணமுடியாது. சொர்க்கபுரியாக திகழும் எமது நாட்டில் மற்றவர்கள் கண் வைப்பதில் நியாயம் இருக்கிறது. உலகின் முக்கிய அமைவிடங்களில் ஒன்றாக இலங்கை இருக்கிறது. ஒல்லாந்தர், போத்துக்கேயர், வெள்ளையர்கள் என யாராக இருந்தாலும் வரலாற்றில் முஸ்லிங்களே பாவிக்கப்பட்டுள்ளார்கள். கடந்த காலங்களில் பண மோகம் கொண்ட முஸ்லிங்கள் சிலரும் ஆயுதக்குழுக்களின் பக்கம் கவரப்பட்டனர். சிங்களவர்களில் சிலரும் பணத்திற்காக ஆயுதக்குழுக்களுக்கு ஒத்துழைத்தவர்களும் இல்லாமல் இல்லை.

இந்த நாட்டின் சொத்துக்களை கபளீகரம் செய்வோர்கள் செய்யும் சதிகளில் முஸ்லிம் இளைஞர்கள் சிக்கிக்கொள்ளாமல் காப்பாற்றும் பணியை பாடசாலைகள், பெற்றோர்கள், கல்விமான்கள், கல்வியதிகாரிகள் முன்னெடுக்க வேண்டும். இந்த நாட்டில் ஏன் குண்டுகள் வெடித்தது. ஏன் கிறிஸ்தவ தேவாலயங்களில் வெடித்தது. முஸ்லிங்கள் என்ற பெயரில் ஏன் வெடிக்கச்செய்யப்பட்டது என்பதை நாங்கள் ஆழமாக சிந்திக்க வேண்டும். நாட்டின் வளங்களும், சொத்துக்களும் மிக அவதானமாக பாதுகாப்படவேண்டியவையாக நாம் காண்கிறோம் என்றார்.

# மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியில் விபத்து:இருவர் படுகாயம்

(ரக்ஸனா)

மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியின் களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட களுதாவளையில் வியாழக்கிழமை இரவு %.30 மணியளவில் இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தில் இருவர் படுகயமமைடைந்து களுவாஞ்சிகுடி ஆதார வைத்தயிசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக களுவாஞ்சிகுடி பொலிசார் தெரிவித்தனர்.

இவ்விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

மட்டக்களப்பு பக்கமிருந்து மோட்டார் சைக்களில் சென்ற ஒருவர், களுவாஞ்சிகுடி பக்கமிருந்து மோட்டர் சைக்கிளில் வந்த ஒருவர் வீதியைக் கடக்க முற்பட்டபோது இவ்விபத்துச் சம்பவித்துள்ளதாவதாக தெரியவருகின்றது.

இதில் படுகாயடைந்த இருவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதோடு, சம்பவ இடத்திற்கு விரைந்த களுவாஞ்சிகுடி போக்குவரத்துப் பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# நவராத்திரி பூஜை நிகழ்வுகள் மட்டக்களப்பு செயலகத்தில் ஆரம்பம்

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)





மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நேற்று நவராத்திரி பூஜை நிறை கும்பம்வைத்து கொளுவைத்து மாவட்ட செயலக ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தில் பிரதமகுரு ஸ்ரீவ ஸ்ரீ உத்தம ணஜகதீஸ்வர குருக்கள் தலைமையில் பூஜைகள் நடைபெற்றுவருகின்றது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை விஜயதசமியுடன் நிறைவுபெறவுள்ளது பூஜைகள்யாவும் மாவட்ட செயலகத்தின் ஒவ்வரு பிரிவினர்களும் ஒவ்வரு நாள் பூசைகளை ஏற்பாடு செய்து நடாத்தி வருகின்றனர். கொரோனா காரனமாக சுகாதார நடைமுறைகளை பின்பற்றி குறிப்பிட்ட அளவினர்களுடன் பூசைகள்யாவும் நடத்தப்படவேண்டும் என்ற அரசாக அதிபர் க.கருணாகரனின் வேண்டுகொளுக்கினங்க நடைபெறுவது குறிப்பிடத்தக்கது

## திருமலை மண்ணின் கலைஞர்கள் ஓர் பார்வை – 01



# ஓவியம் போற்றிய ஓவியனின் சாதனைப் பயணம்!





**அமரர். அருளானந்தம் அருள்பாஸ்கரன் (06.10.1960 - 30.07.2019)**

ஓவியக்கலை என்பது வரைதல், கூட்டமைத்தல் மற்றும் பிற அழகியல் சார்ந்த செயற்பாடுகளையும் உள்ளடக்கி ஊடகங்களில் நிறப்பூச்சுக்களைப் பயன்படுத்தி வரைபவரின் வெளிப்பாட்டு மற்றும் கருத்தியல் நோக்கங்களை வெளிக்கொணரும் இக் கலையானது பல்வேறு ஆக்கத்திறன்களை உள்வாங்குவதற்கும், ஆவணப்படுத்துவதற்கும், வெளிப்படுத்துவதற்குமான ஒரு வழிமுறையாகும். அவ்வகையில், இவ் ஓவியக் கலையில் திருகோணமலை மண்ணில் புகழ் பூத்து விளங்கியவரும், தனது ஓவியக் கலைப் படைப்புக்கள் மூலம் பார்ப்பவர்களை ஈர்த்து தனக்கென்று தனித்தன்மைக் கொண்டவரும், அறிவு, திறமை, முயற்சி என்ற அடிப்படையில் சாதனைகளை முன்னெடுத்துச் சென்றவரும், கலைத்துறையில் தான் வாழும் திருமலை மண்ணின் சார்பாக சாதனைகளைப் புரிய வேண்டும் என்ற ஒரே குறிக்கோளினை மட்டும் தனது எண்ணக் கருவாகக் கொண்டு 2004ஆம் ஆண்டு சிறுவர் சித்திரக் கலைக் கூடத்தை அமைத்து சிறுவர் இலக்கியத்தில் கதை, நாவல், நாடகம், சித்திரம் என ஈடுபட்டு நேற்றுவரை அயராது உழைத்து இன்று ஓவியமாகிவிட்ட ஆசிரியர், ஓவியர் அமரர். அருளானந்தம் அருள்பாஸ்கரன் கலைஞர் அவர்களின் சாதனை கலைப் பயணத்தின் தொகுப்பினை இங்கு காணலாம்.

இவர் கொழும்பு மாவட்டத்தில் சண்முகம் அருளானந்தம் என்பவருக்கும், மேரிலூர்த்து என்பவருக்கும் 06.10.1960ஆம் ஆண்டு பிறந்த இவர் ஆலங்கேணி மற்றும் உவர்மலையை வசிப்பிடமாகக் கொண்டவர். இவரது கலைப் பிரவேசமானது 4-6 வயதிலேயே (1964-1966) ஆரம்பமாகி விட்டது. அவரது தந்தை சண்முகம் அருளானந்தம் கடற்கரை மண்ணில் மண் மேடையில் வரைதல், ஆமை வீடு கோட்டை போன்ற மணச் சிற்பங்களை செய்து காட்டினார். அந்த நிகழ்வே அருள்பாஸ்கரன் அவர்களின் ஓவியக் கலையின் படைப்பாற்றலுக்கு அடிக்கல்லாக வித்திட்டது. அன்று அவர் வரைந்த சித்திரத்திலிருந்தே கலையின் சிந்தனையும், திறமையும் வளர வழிகோலியது என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

இவர்தனது ஆரம்பக்கல்வியினைதற்போதைய கொழும்பு விபுலானந்தா தமிழ் மகா வித்தியாலயத்தில் பயின்றார். தரம் 1,2 இல் அவருடைய வகுப்பாசிரியர்களிடம் வரைதல், ஆக்க வேலைப்பாடுகள் பற்றி கற்க ஆரம்பித்த வேளையில் சிறந்த படைப்புகளுக்கு அனைவராலும் பாராட்டுக்களைப் பெற்றார். திரு.சின்னத்தம்பி ஐயா அவர்களிடம் வண்ணங்களை பொறுத்தமாக பாவிக்கும் நுட்பத்தையும், திரு.வரதராஜனிடம் மனித மெய்நிலைகள் பற்றியும், தூரிகை பாவணை, கை அசைவு பிடித்தல், சுயாதீன அசைவு, வர்ணக் கலப்பு போன்றவற்றை கற்றுக் கொண்டார். அத்துடன் அவருக்கு கிடைக்கப் பெறுகின்ற எந்தப் பொருளையும் புத்தாக்கத்திற்காக பயன்படுத்திக் கொள்ள சிறுவயதில் அனுபவத்தையும் அதற்கான பயிற்சியையும் அவரின் தன்னார்வத்தினால் ஏற்படுத்திய பின்னர் கலையுலகத்திற்குள் பிரவேசிக்க ஆயத்தமானார்.

தொடர்ந்து க.பொ.த சாதாரணதரப் பரீட்சையை மட்டகளப்பு வந்தாறுமுலை மத்திய மகா வித்தியாலயத்தில் எழுதிய பின்னர் உயர்தரத்தில் விஞ்ஞானப் பிரிவை திஃஇ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் முடித்து Diploma In Agriculture க்குரிய பரீட்சையில் சித்தி பெற்று அப் பட்டப் படிப்பை பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் முடித்தார். பின் ஆசிரியப் பயிற்சிக்காக கொக்குவில் இந்துக் கல்லூரியில் இருக்கும் போது மாற்கு ஓவியரின் அறிமுகம் கிடைத்து அவரிடம் சித்திரக்கலை பற்றி கற்றுக் கொண்டார். தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் ஆசிரியர் பயிற்சியில் இருக்கும் போது க.இராசரத்தினம் அவர்களிடம் பிரதிமை ஓவியங்கள் பற்றிக் கற்றுக் கொண்டதோடு, சிவசுப்பிரமணியம் அவரிடம் தனது கலைக்கான அறிவையும் பெற்றுக் கொண்டார்.

1985ஆம் ஆண்டு டிப்ளோமா தராதரப்பத்திரம் பெற்று கொழும்பு மாவட்டத்தில் ஆசிரிய நியமனத்தைப் பெற்று அங்கு வேலை செய்து கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் தனக்கு மிகவும் விருப்பமான சித்திரக்கலை பற்றி தேடி சுயமாக கற்ற அவர் சித்திரப்பாடத்தில் நியமனம் பெற வேண்டும் என்பதற்காக 1990-1992 வரை Diploma In Fine Arts I Vibhavi Acadamy Of Fine Arts இல் பூர்த்தி செய்தார். 1999 இல் திஃஇ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரிக்கு சேவை மாற்றம் பெற்று வந்தார். பின் 2018இன் இறுதிப் பகுதியில் திஃபுனித சூசையப்பர் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றார்.



ஆசிரிய சேவையில் இருந்து கொண்டே 2006 இல் B.A Fine Arts [ Canterbury University. UK ] பட்டம் முடித்தார். 2006 இலிருந்து வடக்கு, கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவளர்கள் அமைச்சு, வடக்கு-கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம், வலயக்கல்வி அலுவலகம் போன்றவற்றில் ஆரம்ப கல்விப் பிரிவு, முன் பள்ளி கல்விப் பிரிவுகளுக்கு அழகியற்கலை, ஆக்கத்திறன் செயற்பாடுகளுக்கான வளவாளராக செயற்பட்டார். 2008இல் M.A Fine Arts பட்டம் முடித்தார். பின் கிழக்கு மாகாண சித்திர ஆசிரியர்களுக்கு SP.Trd in drawing & painting எனும் ஒரு வருட சிறப்பு பயிற்சி US Vibhavi Acadamy Of Fine Arts இனால் ஒழுங்கமைக்கப்பட்ட பயிற்சியில் இவரும் ஒருவராக பயிற்சியினை மேற்கொண்டு பூர்த்தி செய்தார்.

2003-2005 வரை கிழக்கு பல்கலைக்கழகம் முன்பள்ளி பாதுகாப்பு அபிவிருத்தி நிலையம் வந்தாறு முலையில் வருகை தரு விரிவுரையாளராக கடமையாற்றினார். 2005-2006 வரை தேசிய கல்வி நிறுவனம் NIE திருகோணமலை மாவட்ட கல்வி நிலையத்தின் கல்விமானிப் பட்டப்படிப்பின் சித்திரம் கலைக்கான விரிவுரையாளராக பணியாற்றினார். வளவாளர் மற்றும் சித்திரம் வரைதல், வர்ய பயிற்சிவிப்பாளராக Save the children இல் 2000-2009, GTZ இல் 2000-2005, Oxfarm 2000-2001 வரையும், Unicef இல் 2000-2005, Usaid இல் 2005 -2008, People Un Need இல் 2002-2010 வரைக்கும் உதவிக் கல்விப் பணிப்பாளருக்கான, ஆசிரியர்களுக்கான கைநூல் தயாரித்தல், செயன்முறைப் பயிற்சிகள் போன்ற சேவைகளிலும் ஈடுபட்டார். கலைக்கென்று தன்னை முழுமையாக அர்ப்பணித்த இவர் அறிவு ரீதியாகவும் தன்னை வளர்த்துக் கொள்ள தவறவில்லை என்பதற்கு அவரின் கல்விப் பட்டங்களும், கலைப் பட்டங்களும், சேவைகளும் சான்று பகர்கின்றது.

அவர் கலைத்துறையில் நுழைந்து முதலில் படைத்த கலைப்படைப்பு அவரது ஊரான ஆலங்கேணியில் உள்ள விநாயகர் ஆலயத்தின் முகப்பிலே வரைந்த விநாயகர் ஓவியமாகும். இவ் ஓவியம் எண்ணெய் வர்ணத்தினால் வரையப்பட்டது. அத்துடன் அவ்வாலயத்தின் திரைச் சீலையிலும் விநாயகர் உருவம் வரையப்பட்டது. அவ் ஓவியங்கள் அக் கிராமத்து மக்களால் மிகவும் பாராட்டப்பட்டதோடு, திருகோணமலை இந்து இளைஞர் பேரவையினரால் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டார். இதன் பின்னர் குண்டகசாலை விவசாயக் கல்லூரியில் அமைந்துள்ள [DOUBT] குறிஞ்சி குமரன் ஆலயத்தின் திரைச் சீலையிலும் வரைந்து பாராட்டுப் பெற்றார். இவை அனைத்தும் அவரது கலைப் பயணத்தில் ஆரம்ப கட்டமாகவும், அவரது தனி ஆளுமையில் உருவான கலைப் படைப்புக்களாகவும் அமைந்துள்ளது.

இவ்வாறு கலைக்காகவே வாழ்ந்து தன்னை அர்ப்பணித்த இக் கலைஞர் ஓவியக்கலை என்பது கடினமானது இல்லை என்பதை சமுதாயத்தில் உணர வைக்கும் பொருட்டு 2004இல் அவரது தந்தையின் வழிகாட்டலில் சிறுவர் சித்திரக் கலைக் கூடத்தை [ Children Art Gallery ] ஆரம்பித்தார். இவ் கலைக் கூடத்தின் மூலம் இக் கலையினை மாணவர்களுக்கு சிறு வயதில் இருந்தே கொடுக்க வேண்டுமென்றும், அக் கலையுடன் மாணவர்கள் ஒன்றித் திழைப்பர் என்ற எண்ணத்தோடும் இதனை ஆரம்பித்தார். இதன் மூலமாக மாணவர்களுக்கான பயிற்சிகள், செயற்பாடுகள் என மிக நுட்பமாக கற்பித்ததன் பலனாக 200%இல் இவரது மாணவர்களின் படைப்புக்களுக்கு தேசிய மட்டத்தில் 3ஆவது இடம் கிடைத்தது. அத்துடன் சிறந்த ஓவியத்திற்கான தேசிய மட்டத்தில் 2ஆம் இடம் திருகோணமலையைச் சேர்ந்த இவரது மாணவிக்கு கிடைக்கப் பெற்றது. தொடர்ந்து மாவட்ட மட்ட சிறந்த ஓவியர் என்ற வெற்றிச் சான்றிதழ்களையும், தேசிய நிலையில் கண்காட்சி அங்கீகாரமும் எனப் பெற்றுக் கொண்டனர்.

இவரது கலைக் கூடத்தில் மூவினச் சிறார்களும் சித்திரங்களை வரைந்து அசத்துவார்கள். 200ற்கும் மேற்பட்ட மாணவர்கள் இவரின் சித்திரக் கலைக்கூடத்தில் கலையினைப் பயின்று அவர்களில் சில மாணவர்கள் தேசிய விருதுகளையும் பெற்றுள்ளனர். அத்துடன் சித்திரத் துறையில் தெரிவு செய்யப்பட்டு பல்கலைக்கழகமும் சென்றுள்ளனர். மத்திய கல்வி அமைச்சு நடத்தும் அகில இலங்கை ஓவியப் போட்டிகளில் அவரது மாணவர்கள் பங்கு பற்றி தேசிய அளவில் பல பரிசுகளைப் பெறுவதற்கு வழிவகுத்து கொடுத்த பெருமைக்குரியவர். 2004ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ந்து ஆண்டுதோறும் சிறுவர் சித்திரக் கண்காட்சிகளையும், ஆக்கச் செயற்பாடுகளையும், சிறுவர் புகைப்படக் கண்காட்சியையும் திருகோணமலையில் தொடர்ந்து நடாத்திய இக் கலைஞர் சிறுவர் வகுப்புக்களை அறிந்து அவர்கள் வழியில் செயற்படுத்தி வந்தவர். பொறியியல் பீடத்தில் கல்வி கற்கும் சில மாணவர்கள் அவரினை தேடிச் சென்று ஓவியக் கலையை கற்றுக் கொண்டனர். கல்வியியல் கல்லூரியில் இருந்து சந்தேகங்களைக் கேட்டும் தெரிந்து கொண்டனர். தமது மாணவர்களின் கலை முன்னேற்றத்துக்காக கடின உழைப்பை மேற்கொண்ட பிறவிக் கலைஞராவார்.

தனது ஓவியக் கலைப் படைப்புக்களும், தனது மாணவர்களின் கலைப் படைப்புக்களும் சமூகத்தின் மத்தியில் கொண்டு சென்று அவர்களின் இரசிக்கும் தன்மை தனக்கு அங்கீகாரமாக கிடைத்து தனது மாணவர்களின் படைப்புக்கள் உலகறியப்பட வேண்டுமென்று பல்வேறு வகையிலான கண்காட்சிகளை நடாத்தியவர்.



10 ஆம் பக்கம் பார்க்க...



# ஓவியம் போற்றிய ஓவியனின் சாதனைப் பயணம்!



அவரது முதலாவது கண்காட்சி 2000 ஆம் ஆண்டு கொழும்பு தேசிய கலாபவனத்தில் தேசிய மட்டத்தில் நடத்தியவர். பின் 2003இல் 2ஆவது தேசிய கண்காட்சி தேசிய கலாபவனத்தில் நடாத்தினார். இவரது கலைக் கூட மாணவர்களுள் %5 மாணவர்களுக்கு மத்திய கலாசார அமைச்சினால் இக் கலைக்கான வெற்றிச் சான்றிதழ்கள் அளிக்கப்பட்டு பாராட்டப்பட்டனர். தொடர்ந்து தனது திருகோணமலை மாவட்டத்தில் கண்காட்சிகளை நடாத்த வேண்டும் என்பதற்காக 2002இல் தி/இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் கண்காட்சியினை நடாத்தியவர். இதன் மூலம் பிரதேசத்து மக்களிடமிருந்து சிறப்பான வரவேற்பைப் பெற்றதனால் 2004,2006,2008,2010ஆம் ஆண்டுகளில் அதே பாடசாலையில் கண்காட்சியினை நடாத்தி வந்தார். இதன் மூலமாக சித்திரக் கலையில் மாணவர்கள் உள்வாங்கப்பட்டு சித்திரப் பாடத்தை தெரிவு செய்து விரும்பிக் கற்று பெறுபேறுகளில் சிறந்து விளங்கினர். அதனால் அப்பாடசாலையின் கலைத் துறையில் படிப்படியாக முன்னேற்றத்தைக் கொண்டு அக் கலையில் அப் பாடசாலைக்கான ஒரு சிறப்பான அங்கீகாரத்தையும், பெருமையையும் கொடுத்த இக் கலைஞரை பாடசாலைச் சமூகம், பிரதேச வாழ் மக்கள் என அனைவரும் பாராட்டி மகிழ்ந்தனர்.

தொடர்ந்து 2003,2006,2007ஆம் ஆண்டுகளில் தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரியில் ஓவியக் கண்காட்சி நடாத்தினார். 2012,2013ஆம் ஆண்டுகளில் வண்ணங்கள் உணர்த்துவது தான் என்ன? என்ற தலைப்பில் கண்காட்சியை நடாத்தினார். 2014ஆம் ஆண்டில் வண்ண மீன்கள் எனும் தலைப்பில் சிறுவர் ஓவிய ஆக்கத்திறன் கண்காட்சியை நடாத்தினார். 2015இல் முகங்கள் எனும் தலைப்பில் சிறுவர் ஓவிய ஆக்கத்திறன் மற்றும் புகைப்படக் கண்காட்சியினை நடாத்தினார். 2016 இல் நிழல் எனும் தலைப்பில் ஓவியக் கண்காட்சியினை நடாத்தினார்.

இவ்வாறாக கண்காட்சிகள் மூலமாக சமூகத்தின் பார்வை இவர் மேல் விழுந்தது. அவரின் கலைத்துறைக்காக விருதுகளும் கிடைக்கப் பெற்றன. 1994ஆம் ஆண்டு இந்து அபிவிருத்திச் சங்கத்தினால் பேராசிரியர் மௌனகுரு கதையில் அமைந்த சிறந்த நாடகத்தின் ஒப்பனை மேடை அமைப்பு நெறியாள்கை விருது கிடைத்தது. 2009-2010 இல் சிறந்த ஓவியக்கலை ஆசிரியர் எனும் விருதினை Vibhavi Acadamy Of Fine Arts வழங்கி கௌரவித்தது. மற்றும் இவர் ஒரு சிறந்த எழுத்தாளருமாவார். உதவும் உள்ளங்கள் என்ற நாவலினை எழுதியவர். இதற்கான கிழக்கு மாகாண சாகித்திய விருதினை 2011இல் பெற்றவர். 2014இல் ஓவிய கலாவித்தகர் விருதினைப் பெற்றார். இவருக்கு கிடைத்த விருதுகளின் மூலம் சிறந்த கலைஞராக வலம் வந்தவர். ஜஉசராத்துணை - இலங்கை கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் கட்புல தொழில்நுட்பக் கலை மாணவியின் ஆய்வுத் தொகுப்பு 2016 இவர் 200ற்கும் மேற்பட்ட நூல்களுக்கும் புத்தக அட்டைக்கான ஓவியங்களை வரைந்து கொடுத்தவர். கேணிப்பித்தனின் அத்தனை நூல்களுக்கும் ஓவியங்களை கதைக்கருக்கு ஏற்ற வகையில் வரைந்து கொடுத்தவர். கிழக்கு மாகாண தமிழ் மொழித்தின விழா மலர்களுக்கும் இவரால் வரையப்பட்ட ஓவியங்கள் பலராலும் பாராட்டப்பட்டது. இவ்வாறாக தனது படைப்புக்களை தனது இல்லத்தினுள்ளும் படைத்து சிறிய கலைக்கூடமாகவே வைத்திருந்தார். இவரது மனைவி நிர்மலாதேவி அருள்பாஸ்கரன் ஆவார். இவர்களுக்கு அருள்ரதீபன், அருள்நிருஸன், அருள் சுலக்ஸிகா எனும் 3பிள்ளைகள் உள்ளனர். அவரின் கலை வாரிசுகளாகவே உள்ளார்கள்.



இவரது ஓவியங்கள் பார்ப்பவர்களுக்கு கூற வந்த விடயத்தை கண் முன்னே வந்து பறை சாற்றி நிற்க என்றும் தவறியதில்லை. தனக்கென்று ஒரு பாணியை உருவாக்கி ஒவ்வொரு ஓவியத்திலும் புதிய அணுகுமுறைகளை கண்டு பிடித்து, புகுத்தி ஓவியங்களைப் படைத்த எம் மண்ணின் கலைஞர். தனது மாணவர்களின் வளர்ச்சிக்காக மென்மேலும் தன்னை வளப்படுத்தி புதிய புதிய நுட்பங்களை அவர்கள் சிரமமின்றி இலகுவாக புரிந்து கொள்ளும் வகையில் கற்பிப்பதில் தனக்கென்று தனித்தன்மையைக் கையாண்டு முன்னோடியாக திகழ்ந்தவர். இவர் பல்வேறுபட்ட ஓவியங்களை வரைந்திருந்தாலும் அவ் ஓவியங்களை பிரதிமை ஓவியம், நிகழ்ச்சி சித்தரிப்பு மற்றும் கருத்து வெளிப்பாட்டு ஓவியம், தரைக்காட்சி ஓவியம், முன் தள்ளிய புறப்பாட்டு ஓவியம், நிலை பொருட் கூட்ட ஓவியம் என ஐந்து வகையாக பிரித்து நோக்கப்படுகின்றது.



இவர்தனது கலைப் படைப்புக்களை படைப்பதற்கு பல்வேறுபட்ட ஓவியர்களும், ஓவியங்களும் காரணமாக இருந்திருக்கலாம். அதன் ஈர்ப்பினால் ஏற்பட்ட ஆர்வமும் முயற்சியும் தான் இவரை ஒரு கலைஞராக வளர்ச்சியடைய வைத்தது எனக் கொள்ளப்படுகிறது. தனது அறிவுப் பசிக்கு தேடி தேடி கற்றுக் கொண்டு புதிய விடயங்களை இக் கலையினுள் செலுத்தி மாணவர்களுக்கு அதனை வழி நடத்துவதில் அவர் சலித்து நிற்கவில்லை. எமது அனுபவத்தையும், பயிற்சியும், முயற்சியும் கொண்டு ஒரு ஓவியத்தை படைக்கும் போது அதன் சீர் தன்மை பிறளாமல் நேர்த்தியான, நுட்பமான முறையில் அமையும் போது தான் வெற்றிக் கனியை நாம் உண்கின்றோம் என அடிக்கடி கூறிக் கொண்டு இருந்தவர். ஜதகவல் -சண்முகம் அருளானந்தம்ஸ

தனது கடின உழைப்பின் மூலம் கலை ரீதியான தேடலையும், முயற்சியையும் வெற்றிக்கான வழியாகக் கொண்டு முழு ஈடுபாட்டுடன் ஓவியக் கலையினை திருகோணமலை மாவட்டத்தில் விதைத்து விட்ட நன்மதிப்பையும், பெருமையையும் பெற்ற ஒரே ஒரு ஓவியக் கலைஞர் இவரே ஆவார். ஓவியக் கலை மட்டுமன்றி வேறு பல துறைகளிலும் நாட்டம் செலுத்தி அதிலும் தன்னை ஈடுபடுத்தி அத்துறை பற்றியும் கற்று தேர்ந்த பல்துறைக் கலைஞராகவே இவரை நோக்க வேண்டும். திருகோணமலை மாவட்டம் மட்டுமல்லாது, கிழக்கு மாகாணம், வடக்கு மாகாணம் என அவரின் புகழினையும், அவரின் படைப்பாற்றலையும் தெரிந்த அனைத்து நல் உள்ளங்களும் அவரின் இழப்பை தாங்கிக் கொள்ள முடியாமல் இன்னமும் மனம் வருந்துகின்றனர்.

கலை, குடும்பம், தனது மாணவர்கள் என மற்றவர்களுக்காக நற் சேவையினை மட்டும் புரிந்து தன் உடல் நலத்தை மட்டும் கவனிக்காமல் எம் அனைவரின் கண்களில் கண்ணீரை விதைத்துச் சென்றார். மக்களின் நன்மதிப்பையும், வரவேற்பையும் தன் தனித்துவத்தால் பெற்ற இக் கலைஞர் சமுதாயத்திற்கு கலை ரீதியான அனைத்துச் சேவையையும் வழங்க வேண்டும் என்ற எண்ணத்தில் திகழ்ந்த இவரின் மனதை பல ஆயிரம் மக்கள் பாராட்டுவதோடு அவரை நினைவு கூருவதில் பின் நிற்கவில்லை காரணம் இன்று வரை அவரின் பண்பாலும், ஆற்றலாலும், கலையாலும், ஓவியத்தாலும் மக்கள் மனதை கவர்ந்தவர்.

சித்திர ஆசிரியர், ஓவியக் கலைஞர் என்றதையும் தவிர்த்து மற்றவர்களிடம் அவர் நடந்து கொள்ளும் விதம், மரியாதை, பணிவு என்பன இன்று வரை அவரின் பெருமையைப் பாடுகின்றது. தனது சித்திரக் கலைக்கூட மாணவர்களை எதிர்காலத்தில் ஓவியர்களாக மாற்ற வேண்டும் என்ற குறிக்கோளிலிருந்த அவரின் இதயத்தின் துடிப்பை நிறுத்தியது யாருடைய சாபமோ? விதியோ? தனிமனித சமூக ஆளுமையைக் கொண்ட இவரின் கலையினை நிரப்புவதற்கு (ஓவியம்) இடம் உண்டோ? ஓவியக் கலா வித்தகர் என்ற பட்டத்தைப் பெற்று தனது வாழ்வையையே இக் கலைக்காக அர்ப்பணித்த இவரின் சேவையைப் போற்ற வார்த்தைகள் இல்லை. பல்வேறுபட்ட தடைகளுக்கும், சவால்களுக்கும் மத்தியில் அனைத்தையும் தகர்த்தெறிந்து திருகோணமலை பிரதேசத்து கலைஞர்கள் வரிசையில் ஓவியத் துறையில் தனக்கென்று தனித்துவமான அடையாளத்தைப் பெற்ற இவ் சாதனையாளனை மனமுவந்து வாழ்த்துகின்றேன்! போற்றுகின்றேன்!

சிறந்த கலைஞன் சிறந்த மனிதனாக வாழ்ந்து சமூகம் வாழ்த்துபவனாகவும், நாடு போற்றுபவனாகவும் இருப்பான் எனக் கூறுவர். அவ் வகையில் அமரர். அருளானந்தம் அருள்பாஸ்கரன் அவர்கள் சிறந்த கலைஞனாகவும், சிறந்த மனிதனாகவும், சமூகம், நாடு வாழ்த்தி போற்றுபவனாகவும் எல்லோர் மனதிலும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்.

என் உடலால் வர்ணங்களை பிடிக்க முடியாத நிலை வரும் வரை கலைப் படைப்புக்களை படைத்துக் கொண்டு இருப்பேன். எனக் கூறிய அவர் இவ் உலகத்தையும் எம்மையும் விட்டுச் சென்றது எம் மண்ணின் ஓவியக் கலைக்கே ஏற்பட்ட பேரிழப்பாகும். எனினும் அவர் எம் மண்ணை விட்டுச் சென்றாலும் அவரின் கலைச் சேவையும், ஓவியத்தின் புகழும், பெருமையும் என்றுமே அழியாது இவ்வுலகம் இருக்கும் வரை நிலைத்திருக்கும்.

ஓவியம் போற்றிய இவ் ஓவியனின் சாதனைக் கலைப் பயணம் எல்லோரின் பார்வைக்கும், தேடலுக்கும் காத்திரமானதாக அமையப் பெறும் என்ற கருத்துக்கு எவ்வித புறக்கணிப்பும் இல்லை.

**தொகுப்பு :- திருமலை தட்சாயினி ஞானசங்கரன்**






# கிழக்கு மாகாணத்திற்கான கல்வித் தரவுகளைக் கொண்ட மென்பொருள் அமைப்பை அமைக்க முடிவு

(ஹஸ்பர் ஏ ஹலீம்)



கிழக்கு மாகாணத்திற்கான கல்வித் தரவுகளைக் கொண்ட மென்பொருள் அமைப்பை அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது

இது தொடர்பிலான ஆரம்ப கட்ட கலந்துரையாடல் திருகோணமலையில் உள்ள கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் மாகாண ஆளுனர் அனுராதா யஹம்பத் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் நேற்று காலை நடைபெற்றது.

இவ் நிகழ்வில் மாகாண கல்வி செயலாளர் கிரிஸ்டிலால் பெர்னாண்டோ, ஆளுநரின் செயலாளர் எல்.பி. மதநாயக்க, ஆளுநரின் உதவி செயலாளர் ஏ.ஜி தேவேந்திரன் மற்றும் உதவி பணிப்பாளர் (திட்டமிடல்) சுதர்சன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கிராமிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி வெற்றிடங்களுக்கான நேர்முகத்தேர்வு!



(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

தற்பொழுது மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கான வெற்றிடங்கள் நிலவிவரும் நிலையில் அவ்வெற்றிடங்களை வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டு விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தது.

இந் நிலையில் குறித்த வெற்றிடங்களுக்காக விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகத்தேர்வு மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் அவர்களது ஆலோசனைக்கு அமைவாக மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.சுதர்சனி ஸ்ரீகாந்த் தலைமையில் மாவட்ட செயலகத்தில் தொடர்சியாக இடம்பெற்று வருகின்றது.

இதனடிப்படையில் மாவட்டத்தில் நிலவுகின்ற 14 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் உள்ள 18 பதிவாளர் பிரிவுகளுக்குமாக கிராமிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர்களுக்கான வெற்றிடங்கள் நிறப்பப்படவுள்ளதுடன், குறித்த நேர்முகத் தேர்வுகளில் மேலதிக காணிப்பதிவாளர் இ.ராகுலன் மற்றும் மாவட்ட சமுர்த்தி திணைக்கள கணக்காளர் எஸ்.எம்.பசீர் உள்ளிட்டோரின் பங்கேற்புடன் தேர்வுகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வாணி விழாவை முன்னிட்டு ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தில் டெங்கொழிப்பு



(வி.சுகிர்தகுமார்)

நாட்டில் டெங்கு நோய் பரவுதலை கட்டுப்படுத்தும் பல்வேறு நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது.

பொதுமக்களின் குடியிருப்புக்கள் மாத்திரமின்றி அரச திணைக்களங்கள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் பொது இடங்கள் என பல்வேறு பகுதிகளிலும் டெங்கொழிப்பு சிரமதானங்களை மேற்கொள்ளுமாறு சுகாதார பிரிவினரின் மூலமாக அறிவுறுத்தல்களையும் வழங்கப்பட்டு வருகின்றது.

இதற்கமைவாகவும் வாணி விழாவை முன்னிட்டும் ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்திலும் இன்று மாபெரும் சிரமதானப்பணிகள் பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர் வி.பிரபாகரன் தலைமையில் உதவிப்பிரதேச செயலாளர் ஆர்.சுவாகரின் மேற்பார்வையில் மேற்கொள்ளப்பட்டது.

அலுவலகத்தில் உள்ள பிரிவுகள் ரீதியாக பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டு சிரமதானப்பணிகளை மேற்கொள்ளுமாறு பிரதேச செயலாளரால் ஆலோசனை வழங்கப்பட்டது.

இதன் அடிப்படையில் பிரதேச செயலகத்தை சூழவிருந்த பல்வேறு பகுதிகளிலுமிருந்த குப்பை கூழங்கள் அகற்றப்பட்டதுடன் டெங்கு பரவக்கூடிய பிளாஸ்டிக் போத்தல்கள் சிரட்டைகள் உள்ளிட்ட பொருட்கள் யாவும் தீயிட்டு எரிக்கப்பட்டன.

மேலும் பிரதேச செயலக சூழலை அழகுபடுத்தும் வகையிலான வேலைத்திட்டமும் மரக்கன்றுகளை பராமரிக்கும் பணியும் முன்னெடுக்கப்பட்டது. இச்சிரமதானப்பணியில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் அனைவரும் இணைந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இதேநேரம் வருமுன் காப்போம் எனும் முதுமொழிக்கேற்ப அரச உத்தியோகத்தர்கள்; செயற்பட வேண்டும் என பிரதேச செயலாளர் கோரிக்கை விடுத்தார்.

# இராணுவ தினத்தை முன்னிட்டு நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் ஆயுர்வேத பானம்

(வி.சுகிர்தகுமார்)

ஒக்டோபர் 10ஆம் திகதி கொண்டாடப்படவுள்ள இலங்கை இராணுவ தினத்தை முன்னிட்டு அக்கரைப்பற்றில் அமைந்துள்ள இராணுவத்தின் 241 ஆம் படைப்பிரிவின் ஏற்பாட்டில் பல்வேறு நிகழ்வகள் ஒழுங்கு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதற்கமைவாக இன்று அக்கரைப்பற்று இராணுவ முகாமின் 241 ஆம் படைப்பிரிவின் பூங்கா முன்பாக நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் ஆயுர்வேத பானம் இலவசமாக பொதுமக்களுக்கு வழங்கும் முன்னேற்பாடுகள் நிந்தவூர் அரச ஆயுர்வேத ஆராய்ச்சி தொற்றா நோய் வைத்தியசாலையின் பணிப்



பாளருமான டாக்டர் கே.எல்.எம்.நக்பரின் தலைமையில் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது 241 ஆம் படைப்பிரிவின் கட்டளை அதிகாரி பிரிகேட் கொமாண்டரிடம் ஆயுர்வேத பானத்தை சூடாக வைத்திருக்கும் வெந்நீர் பாத்திரம் கையளிக்கப்பட்டதுடன் ஆயுர்வேத மருந்து பொதிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

இதேநேரம் நீத்தை இராணுவ முகாம் பொறுப்பதிகாரி உள்ளிட்ட இராணுவத்தின் உயர் அதிகாரிகளிடமும் இராணுவத்தினருக்கான ஆயுர்வே மருந்து பொதிகளும் வழங்கப்பட்டன.பின்னர் ஆயுர்வேத பானமும் இராணுவத்தினரிடையே பரிமாறப்பட்டதுடன் தொடர்ந்து பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கும் செயற்பாடுகளும் ஆரம்பிக்கப்பட்டன.இங்கு கருத்து தெரிவித்த டாக்டர் கே.எல்.எம்.நக்பர் இராணுவ தினத்தை முன்னிட்டு அவர்களை கௌரவிக்கும் முகமாக குறித்த நிகழ்வுகள் ஒழங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் பொதுமக்கள் தொடர்ந்தும் குறித்த இடத்தில் இலவசமாக ஆயுர்வேத பானத்தை பெற்று அருந்த முடியும் எனவும் கூறினார்.

# திருகோணமலையில் சிறுவர் தின பிரதான நிகழ்வு..!





(அ . அச்சுதன்)

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு மகளிர் மற்றும் பெண்கள் அபிவிருத்தி முன்பள்ளி, ஆரம்ப கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு மற்றும் கல்விச்சேவைகள் இராஜாங்க அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட திருகோணமலை மாவட்டத்தின் சிறுவர் தின பிரதான நிகழ்வு மாவட்ட செயலகத்தில் மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி முன்பள்ளி,ஆரம்பக்கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள், கல்வி சேவைகள் இராஜாங்க அமைச்சர் பியால் நிசாந்த டி சில்வா அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் சிறுவர்கள் மற்றும் மகளிரின் அபிவிருத்தி கருதி பல்வேறு வகையான ஆக்கபூர்வமான செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. தற்போது மாவட்ட மட்ட பிரதேச அடிப்படையில் திட்டங்கள் வகுக்கப்பட்டு சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி தொடர்பான செயற்பாடுகள் கிரமமான முறையில் முன்னெடுக்கப்படுகின்றது.

சிறுவர் துஷ்பிரயோகம் சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல் உட்பட பல விடயங்கள் தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்பட்டு அவற்றை முற்றாக ஒழிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. எனவே இந்த விடயத்தில் அனைவரும் பொறுப்புடன் செயற்படல் வேண்டும். அது மாத்திரமல்ல மகளிர் நலன் கருதி பல்வேறு வகையான செயற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இவற்றின் மூலமாக சிறுவர் மற்றும் மகளிரின் உரிமைகளை பாதுகாத்து அவர்கள் சிறப்பான முறையில் சமூகத்தில் வாழ வழி செய்வதோடு நாட்டினுடைய நலனுக்கு பங்களிப்புச் செய்யக்கூடியவர்களாக மாற்றியமைப்பது இதன் பிரதான நோக்கமாக அமைவதாக அமைச்சர் அவர்கள் இதன்போது மேலும் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த கர்ப்பிணி தாய்மார்கள், முன்பள்ளி பாடசாலைகளுக்காற உதவிகள், விதவைப் பெண்களுக்கான இலகு கடன் உதவிகள், சுய தொழில் உதவி உபகரணங்கள், பாடசாலைகளுக்கான சுய கிருமித்தொற்று நீக்கி இயந்திரம், தையல் இயந்திரங்கள் உட்பட பல உதவிகள் இதன் போது தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு அமைச்சரினால் வழங்கிவைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் இலங்கைக்கான பாகிஸ்தான் பதில் உயரஸ்தானிகர் தன்வீர் அஹமத், திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்பு குழுவின் தலைவருமான கபில அத்துகோரல, இராஜாங்க அமைச்சின் செயலாளர், திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோராள, அமைச்சின் உயர் அதிகாரிகள், பொலிஸ் திணைக்கள அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள்,சக உத்தியோகத்தர்கள் மற்றும் பயனாளிகளும் கலந்துகொண்டனர்.

# மன்னார் மாவட்டத்தில் கோவிட் தோற்றாளரகள் எண்ணிக்கை குறைவடைந்து செல்லுகின்றது சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன்

( வாஸ் கூஞ்ஞ)



மன்னார் மாவட்டத்தில் கடந்த மாதம் (செப்படம்பர்) ஒரு நாளைக்கு 9 பேர் தொடக்கம் 15 பேர் கொவிட் தொற்றாளர்ளாக காணப்பட்ட நிலை மாறி தற்பொழுது இது 7 ஆக குறைவடைந்துள்ளது. அத்துடன் கொவிட் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கையில் இறுதி கட்டத்தை நாம் நெருங்கியுள்ளளோம் என மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் இவ்வாறு தெரிவித்தார்.

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் வெள்ளிக்கிழமை காலை தனது அலவலகத்தில் மன்னார் மாவட்டத்தில் கொவிட் 19 தொடர்பான ஊடக சந்திப்பொன்றை மேற்கொண்டார்.

இவ் ஊடக சந்திப்பின்போது அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்

மன்னார் மாவட்டத்தில் நேற்றையத் தினம் அதாவது வியாழக்கிழமை (07.10.2021) அன்று பத்து கொவிட் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதில் 05 நபர்கள் மடு சுகாதார அதிகாரி பிரிவிலும், 04 பேர் நானாட்டான் சுகாதார அதிகாரி பிரிவிலும் ஒருவர் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையிலுமே அடையாளம் காணப்பட்டவர்கள் ஆவர்.

இவர்களுடன் சேர்த்து இந்த மாதம் 52 கொவிட் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதேவேளை கடந்த மாதம் (செப்படம்பர்) ஒரு நாளைக்கு 9 பேர் தொடக்கம் 15 பேர் கொவிட் தொற்றாளர்ளாக காணப்பட்ட நிலையில் தற்பொழுது இது 7 ஆக குறைவடைந்துள்ளது.

அதேவேளையில் தற்பொழுது நூறு பி.சி.ஆர். மற்றும் அன்ரிஜென் பரிசோதனை மேற்கொள்ளுகின்றபோது ஐந்து பேரே கொவிட் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டு வருகின்றனர்.

இதுவரை மொத்மாக 23 கொவிட் மரணங்கள் மட்டுமே மன்னார் மாவட்டத்தில் சம்பவித்து உள்ளன.

இவற்றில் ஆகக்கூடிய மரணம் ஒகஸ்ட் மாதமே பதிவு செய்யப்பட்டுள்ளது. அதாவது 10 நோயாளர்கள் இவ் மாதத்தில் மரணித்துள்ளனர்.

இதேவேளை செப்டம்பர் மாதம் 12 ந் திகதிக்கு பின்பு கொவிட் தொற்றாளர்கள் எவரும் மரணித்ததாக பதிவு செய்யப்படவில்லை.

அத்துடன் கொவிட் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கையில் இறுதி கட்டத்தை நாம் நெருங்கியுள்ளளோம்.

இருபது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 85367 பேர் முதலாவது தடுப்பூசிகளை பெற்றுள்ளனர்.

இரண்டாவது தடுப்பூசியை இதுவரை 63222 பேர் பெற்றுள்ளனர். இதில் மொத்த தடுப்பூசி வழங்கலில் முதலாவது தடுப்பூசியில் 81.3 சதவீதமானோரும். இரண்டாவது தடுப்பூசி 60.2 சதவீதமாகவும் காணப்படுகின்றது.

அத்துடன் 19 வயதுடைய பாடசாலை மாணவர்கள் அத்துடன் பாடசாலையைவிட்டு இடைவிலகல் ஆகியோருக்கான தனியொரு பைசல் தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டம் எதிர்வரும் வாரம் ஆரம்பமாக இருக்கின்றது.

இதற்கு அடுத்தபடியாக 18, 17. 16 மற்றும் 15 வயதினருக்கு இவ் தடுப்பூசி ஒழுங்கு முறையில் வழங்கப்படும் எனவும்.

இவ்வாறானவர்களுக்கு ஒரு தடுப்பூசியே வழங்கப்பட இருக்கின்றது. 19 வயதினருக்கு போடப்பட இருக்கும் தடுப்பூசி தொடர்பான வேலைத் திட்டம் தற்பொழது பூர்த்தி அடையும் நிலையில் காணப்படுகின்றது என இவ்வாறு தெரிவித்தார்.

# கலக்கப்போகும் திருநங்கைகள்!



## இந்தியாவில் தமிழ்ப்பெண்!..

**பொதுவாக** திருநங்கைகள் என்றால் நமது தமிழ்ச் சமூகத்தால் ஒதுக்கப்பட்டவர்களாகவே கணிக்கப்பட்டு வந்தார்கள். ஆண்டவன் படைப்பில் ஒவ்வொரு மனிதருக்கும் நீ இப்படித்தான் இருப்பாய் என்று கூறப்படுகின்றது. உடலில் ஏற்படும் இயற்கை மாற்றங்களால் திருநங்கை என்று கூறப்படுவோர் தோற்றம் பெற்று வாழ்ந்து வருகிறார்கள்..

பொதுவாக இந்தியா, இலங்கை மற்றும் வறியநாடுகளில் இவர்களை ஒதுக்கி வைப்பதும் இவர்களின் உரிமை மறுக்கப்படுவதும் அவர்களை ஒரு மனித ஜீவன்கள் என்றுகூடப் பார்க்காமல் அவர்களை வாழவிடாமல் செய்துவிடுவார்கள். இன்னும் சில நாடுகளில் சமயம், கலாச்சாரம், ஆச்சாரம், அது இது என்று கூறி இந்த இனத்தவர்களை கொலைசெய்துவிடும் சம்பவங்களும் ஏராளம் நடைபெற்றிருக்கின்றன.

இன்று உலகில் இந்தத் திருநங்கைகளையும் சமூகத்தில் ஒரு அங்கமாக ஏற்று வாழும்நிலை அதிகரித்துவருவதைக் காணக் கூடியதாக இருப்பதை நாம் வரவேற்கிறோம். எல்லோரும் மனிதர்கள்தானே என்ற உணவு மேலோங்கிவருவது சிறப்பான விடையமாகும்.

இந்நிலையில் இன்று இவர்கள் உலகில் பல சாதனையாளர்கள், வெற்றியாளர்கள், விஞ்ஞானிகள், கண்டுபிடிப்பாளர்கள், ஊடகவியலாளர்கள், அரசியலாளர்கள், கல்வியாளர்கள் எனப்பல்வேறு துறைகளில் நம்பிக்கை நட்சத்திரங்களாக ஒளிர்கின்றனர்.

அந்த வகையில் யேர்மனியில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் வரலாற்றில் முதன்முதலாக ஒரு திருநங்கையும் உலகின் மிகப்பிரபலமான தமிழ்நாடு ''பிக்பொஸ்'' தொலைக்காட்சி நிகழ்ச்சியிலும் ஒரு தமிழ்ப்பெண் முதன்முதலாகப் போட்டியாளராக இணைந்திருக்கிறார்கள். இவர்கள் இருவரையும் வாழ்த்தி வரவேற்பதுடன் இவர்கள் பற்றிய குறிப்புகளையும் பார்ப்போம்!..

பிக்பாஸில் வீட்டில் முதல் முறை திருநங்கை... அவர் யார் தெரியுமா? அழகோ..அழகு... வியப்பில் பார்வையாளர்கள் தமிழகம் மட்டுமல்ல, உலக தொலைக்காட்சி நேயர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருந்த பிக்பாஸ் சீசன் 3.10.2021ல் தொடங்கி உள்ளது.

பிரபல தொலைக்காட்சியில் ஒளிப்பரப்பாக ஆரம்பித்துள்ள இந்த நிகழ்ச்சியில் போட்டியாளராக அறிமுகமாகி இருப்பவர் திருநங்கை நமீதா மாரிமுத்து. தமிழ் பிக்பாஸ் சீசனில் முதன் முதலில் பங்கேற்றுள்ள திருநங்கை போட்டியாளர் என்ற பெருமையை அவர் இதன் மூலம் பெற்றிருக்கிறார்.

நேயர்களுக்கு புதிய முகமான இவரின் பயோடேட்டா ஆச்சரியம் தருகிறது. சென்னையை சேர்ந்தவர், மாடலிங் துறையில் மிகுந்த ஆர்வம் கொண்டவர்.2014ம் ஆண்டு திருநங்கைகளுக்கான மிஸ் சென்னை போட்டியில் வெற்றி பெற்று அனைவரையும் திரும்பி பார்க்க வைத்தவர். அதன்பிறகும் அவரது வெற்றிநடை நிற்கவில்லை.

2015ம் ஆண்டின் மிஸ் கூவாகம், 2018ம் ஆண்டில் மிஸ் இந்தியா என ஒரு கலக்கு கலக்கினார். ஸ்பெயினில் சர்வதேச திருநங்கை உலக போட்டியில் இந்திய போட்டியாளராக பங்கேற்று அசத்தியவர்.

நீல நிற உடையில் சிக்கென்று நமீதா மாரிமுத்து பிக்பாசிஸ் என்ட்ரியாகி இருக்கிறார். இப்போது இருக்கும் போட்டியாளர்களில் இவர்தான் மிக உயரமானவர். நாடோடிகள் 2 படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் முத்திரை பதித்த நமீதா, கொரோனா காலத்தில் ஏழை மக்களின் பசியை போக்கியவர்.

பல்வேறு சாதனைகள், சமூக சிந்தனை என கலவையாக போட்டியாளராக உள்ளே அனுப்பி வைக்கப்பட்டு உள்ளார். இதுவரை நடந்து முடிந்த மற்ற பிக்பாஸ் சீசன் போன்று இல்லாமல் முற்றிலும் மிக வித்தியாசமாக இது இருக்க போகிறது என்று நமீதாவின் என்ட்ரியை வைத்து இப்போது பார்வையாளர்கள் இணையத்தை ரவுண்டு கட்ட ஆரம்பித்துவிட்டனர்.

## ஐரோப்பாவில் யேர்மன் பெண்!..



**ஜேர்மன் பொதுத்தேர்தலில் முதன் முறையாக வெற்றி வாகை சூடி வரலாறு படைத்த திருநங்கைகள்!**

ஜேர்மனியில் ஞாயிற்றுக்கிழமை நடந்த பொதுத்தேர்தலில் புசநநளெ கட்சியைச் சேர்ந்த இரண்டு திருநங்கைகள் வெற்றி வாகை சூடி வரலாறு படைத்துள்ளனர்.

Greens கட்சியை வேட்பாளராக போட்டியிட்ட Tessa Ganserer> Nyke Slawik இருவருமே ஜேர்மன் பொதுத்தேர்தலில் வெற்றிப்பெற்ற முதல் திருநங்கைகள் என வரலாறு படைத்துள்ளனர்.

இது Greens கட்சியினருக்கு ஒரு வரலாற்று வெற்றி, Greens கட்சியினருக்கு மட்டுமின்றி rans-emancipatory இயக்கம் மற்றும் ஒட்டுமொத்த ஙரநநச சமூகத்திற்கும் இது வரலாற்று வெற்றி தான் என 44 வயதான Ganserer கூறினார்.

ஜேர்மன் பொதுத்தேர்தல் முடிவுகள் ஒரு திறந்த மற்றும் சகிப்புத்தன்மை கொண்ட சமூகத்தின் அடையாளமாகும்.

Greens ன் முன்னுரிமை பட்டியலில், அடையாள ஆவணங்களில் பாலியல் மாற்றத்தை உறுதிப்படுத்துவதற்கான எளிதான செயல்முறை கொண்டு வருவதே முதலிடம் பிடித்துள்ளது.

இரண்டு மகன்களைக் கொண்ட Ganserer லெஸ்பியன் தாய்மார்கள் குழந்தைகளை தத்தெடுப்பதற்கு அனுமதிக்கும் சட்ட மாற்றங்களையும் விரும்புவதாக தெரிவித்துள்ளார்.

North Rhine-Westphalia-வில் வெற்றிப்பெற்ற 27 வயதான Slawik, தேர்தல் முடிவுகளை என்னால் நம்பவே முடியவில்லை என்று மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளார்.

homophobia மற்றும் transphobia, ஒரு சுயநிர்ணய சட்டம் மற்றும் கூட்டாட்சி பாகுபாடு எதிர்ப்பு சட்டத்தை மேம்படுத்துவதற்கு எதிராக நாடு தழுவிய செயல் திட்டத்திற்கு Slawik அழைப்பு விடுத்துள்ளார்.

**ஆசிரியர் 'மண்' சஞ்சிகை -யேர்மனி - 4.10.2021**



# உலக அஞ்சல் தினம் ஐப்பசி – 09

(அ. அச்சுதன்)



ஆதி காலத்தில் செய்தி பரிமாற்றம் புகை எழுப்புதல், கூக்குரல் ஒலி, அம்பு மூலம், புறா, அஞ்சல் ஓட்டம் (அடர்ந்த காடுகள்) ஊடாக இடம்பெற்றது. நாளடைவில் அஞ்சல், குதிரை வண்டி, றோயல் வான் ,புகையிரதம், பேரூந்து, விமானம், கப்பல் ஊடாக இடம் பெற்று

தற்போது நடைபெற்று வருகிறது இன்று குறும் செய்தி மின்னஞ்சல் , தொலைநகல், என வளர்ச்சி பெற்றுள்ளதை அவதானிக்க முடியும்.

பல ஆண்டுகளுக்கு முன்பு கடித தொடர்பு ஐரோப்ப நாடுகளில் இருந்து மேற் கொள்ளப்பட்டது. படிப்படியாக ஏனைய நாடுகளும் கடித தொடர்புகளை ஆரம்பித்த போது அஞ்சல் கட்டணம் அறவிடுவதில் பல பிரச்சனைகள் ஏற்பட்டது.

அதனை நிவர்த்தி செய்யும் முகமாக அமெரிக்கா அஞ்சல் மாஅதிபதி 1863 ஆம் ஆண்டு பாரிஸ் நகரில் 15 நாடுகள் இணைந்து ஒரு கட்டமைப்பை ஸ்தாபித்தார். மீண்டும் (18%8.10.09) இல் சர்வதேச அஞ்சல் ஒன்றியம் என்று மாற்றி அமைக்கப்பட்டது. அந்த தினம் இன்று உலக நாடுகளில் ஐப்பசி 09 ஆம் திகதி உலக அஞ்சல் தினமாக கொண்டாடப்படுகிறது. தற்போது 194 நாடுகள் அங்கம் வகிக்கின்றது. 18%% இல் இலங்கை அங்கத்துவம் பெற்றது. சுதந்திர நாடு என்ற வகையில் இலங்கை (1949.0%.13) மீண்டும் அங்கத்துவம் பெற்றது.

இலங்கையில் கிழக்கிந்திய கம்பனிகளால் கரையோர மார்க்கமாக அஞ்சல் சேவை ஆரம்பிக்கப்பட்டது. 1812 இல் மக்கள் செறிந்து வாழ்ந்த திருகோணமலை, யாழ்ப்பாணம், மன்னார், கொழும்பு, காலி, மாத்தறை ஆகிய இடங்களில் தபால் அலுவலகங்கள் ஆரம்பிக்கப்பட்டது. 1921 இல் ஆனமடுவ, திவுலபிட்டிய ,கிரியெல்ல, அக்மீமன, மூதூர், சிலாவத்துறை ஆகிய இடங்களில் உப தபாலகங்கள் ஆரம்பிக்கப்பட்டது.

இலங்கையில் 1832 இல் குதிரை வண்டி, 1805 இல் புகையிரதம், 1928 இல் ஆகாய விமானம், 1958 இல் பேரூந்து மூலம் தபால்கள் பரிமாற்றம் செய்யப்பட்டது.

கொழும்பு மத்திய தபால் தரம் பிரிக்கும் நிலையம் மையப்படுத்தி இரவு வேலைகளில் நாட்டின் பல பாகங்களிற்கு தபால் பொருட்கள் அனுப்பி வைக்கப்படுவதோடு அங்கு இருந்து எடுத்தும் வரப்படுகிறது.

முதல் நாள் அஞ்சல் இடப்படும் அஞ்சல், தபாலகம், உப தபாலகங்களில் உள்ள 'தபால் சேவகர்' மூலம் அடுத்த நாள் துவிச்சக்கரவண்டி, நடை மூலமாக, விநியோகம் செய்யப்படுகிறது. தபால் சேவகர்கள் மழை, வெயில் பாராது காடு, மேடு, பள்ளம் பகுதிகளிற்கு சென்று அஞ்சல் விநியோகம் செய்பவர்கள் பிரதான நகரம், மலை நாடு போன்ற இடங்களில் நடை மூலம் இன்னும் அஞ்சல் சேவை நடைபெற்று வருகிறது. சில பகுதிகளிற்கு தோணி, சிறிய கப்பல் ஆகியவற்றின் ஊடாக சென்று அஞ்சல் விநியோகம் நடைபெறுகிறது.



தபால் சேவகர்களை தபால் மாமா, தபால் மாத்தையா, பியோன் போன்ற வார்த்தைகளில் மக்கள் அழைக்கின்றனர்.

எமது நாட்டின் சகல அரச நிறுவனங்கள், கூட்டுத் தாபனங்கள் காலையில் அஞ்சல்களை எதிர் பார்த்து வேலைகளை ஆரம்பிக்கின்றனர். அதேபோல் வேலை முடிவடையும் நேரத்தில் தமது அன்றைய அஞ்சல்களை அனுப்புகின்றனர்.

காலையில் பெரும்பாலும் சீருடை அணிந்த தபால் சேவகர்களின் மணி ஓசையை எதிர்பார்த்து காத்து இருப்பார்கள். தபால் சேவகர்களின் சேவை இன்றி எந்த ஒரு தபாலகமும் இயங்க முடியாது. தபால் சேவகர்கள் அஞ்சல் விநியோகத்துடன் மின்சாரம் தொலைபேசி பட்டியல் பண அளவீடு, காப்புறுதி பணம் அறவீடு போன்ற நடவடிக்கைகளை மக்களின் காலடியில் நிறைவேற்றி வைக்கின்றனர்.

இலத்திரனியல் வளர்ச்சியில் குறும்செய்தி , மின்னஞ்சல் , தொலைநகல் வளர்ச்சி பெற்றலும் மூலப்பிரதிகள் காசேலைகள், கோவைகள் ,கடவுச்சீட்டு, ஆள் அடையாள அட்டை, பரீட்சை முடிவுகள், அந்தரங்க செய்திகள் ஆகியவற்றை பரிமாற்றம் செய்வதற்கு மூடிய தபால்களிற்கு மாற்றீடு இவ்வுலகில் இல்லை.

அஞ்சல் பொருட்களை விநியோகத்தில் பெரும் பங்கு ஆற்றி வரும் தபால் சேவகர்களை இன்றைய உலக அஞ்சல் தினத்தில் கௌரவிப்போம். எமது நாட்டில் 200 ஆண்டுகள் கடந்து அஞ்சல் சேவை நடைபெற்று வருகிறது என்பது சிறப்பு.





# போது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் பைத்தியகாரர் போன்று புலம்புகிறார்

கேட்டுக்கொள்கின்றேன் என எதிர்க்கட்சி உறுப்பினர் பீல்மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம் பெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில், நாடு பொருளாதார ரீதியிர் பாரிய வீழ்ச்சியடைந்துள்ளது. மக்கள் வாழமுடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். ஆனால் அரசாங்கத்தில் தேவையான அளவு பணம் இருப்பதாக அரசாங்கத்தில் இருப்பவர்கள் தெரிவித்து வருகின்றனர்.

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வரும்போது மக்களுக்கு அளித்த வாக்குறுதிகள் எதனையும் நிறைவேற்றவில்லை. ஆனால் இன்று மக்கள் அத்தியாவசிய பொருட்களை பெற்றுக்கொள்ள காலையிலேயே நீண்டவரிசையில் காத்துக்கொண்டிருக்கவேண்டி இருக்கின்றது. ஞானசார தேரர் ஊடகத்துக்கு முன்னால் வந்து பயங்கரவாத தாக்குதல் ஒன்று தொடர்பில் கதைப்பதை கண்டேன். நான் ஒரு சிறந்த பௌத்தன். அதனால் அவரிடம் கேட்டுக்கொள்வது, தர்கா நகரில் பிரச்சினை ஏற்படுத்தியதுபோன்று மீண்டும் இந்த நாட்டில் அவ்வாறான விடயங்களை கொண்டு வந்து, மக்கள் மத்தியில் அச்சம், பயத்தை ஏற்படுத்தி நாட்டை அழித்துவிட வேண்டாம் என தலை வணங்கி கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் பைத்தயகாரர் போன்று புலம்புகிறார். பைத்தியகார பேச்சுக்களை பேசிக்கொண்டு, அவரும் ஞானசார தேரர் பயணிக்கும் பாதையிலேயே செல்கின்றார். இது குரங்குக்கு சவரக்கத்தியை வழங்கியது போல், அவர் நாளா பக்கத்துக்கும் அடித்துக்கொண்டிருக்கின்றார்.

அதனால் அரசாங்கம் தனது வங்குராதேத்து நிலைமையை மறைப்பதற்காக மக்கள் மத்தியில் தேவையற்ற அச்சத்தை, பீதியை ஏற்படுத்தக்கூடாது என்றார்.





# மாத்தளை மாநகர மாட்சிக்கு அணிசேர்க்கும்

# பம்பர கிரிஎல்ல சுற்றுலாத்தளம்

நாட்டில் இந்தவாரம் நீக்கப்பட்ட தனிமைப் படுத்தல் ஊரடங்குச்சட்டத்தினையடுத்து சுற்றுலாத் தளங்களும் படிப்படியாக வழமைக்கு திரும்பிக் கொண்டிருக்கின்றன.

கிழக்கில் பாசிக்குடா உல்லை அறுகம்பை போன்ற உல்லாசத்தளங்களை நோக்கி உள்நாட்டு வெளிநாட்டு உல்லாசப்பயணிகள் படையெடுக்கத் தொடங்கியுள்ளனர்.

அதேவேளை மத்தியமாகாணத்திலுள்ள மாத்தளை மாவட்டத்தில் பல நீர்வீழ்ச்சிகள் சுற்றுலாப்பயணிகளுக்கு களமாகஇருந்துவருகின்றன.

இலங்கையில் ஆக யாழ்.மாநகரசபை மட்டு.மாநகரசபை மாத்தளை மாநகரசபை ஆகிய மூன்று சபைகளில் மாத்திரமே தமிழ் மாநகரசபை முதல்வர்கள் சமகாலத்தில் ஆட்சியிலுள்ளனர்.

வடக்கிழக்குக்கு வெளியேயுள்ள ஒரேயொரு மாத்தனை மாநகரமுதல்வர் சந்தனம் பிரகாஷ் ஓர் அன்பான அழைப்பை விடுத்தார். அங்குள்ள இயற்கை எழில்கொஞ்சும் இடங்களைவ ந்து பார்வையிடுமாறு.

அதற்கிணங்க காரைதீவு பிரதேசசபைத்தவிசாளர் கி.ஜெயசிறில் கல்முனை மாநகரசபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் ஆகியோருடன் நானும் அங்கு விஜயம்செய்தோம். எம்முடன் யனோஜ் யது ஆகிய இரு இளவல்களும் கலந்துகொண்டனர்.

மாத்தளை மாநகரின்கண் அடியவர்களுக்கு அருள் பாலித்துகொண்டிருக்கின்ற மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயத்திற்குசென்று நெய்விளக்கேற்றிவழிபட்ட பின்னர் றிவர்ஸ்டன் எனும் அழகிய சுற்றுலாமையத்தைநோக்கி புறப்பட்டோம். அது நகரிலிருந்து 24மைல்கல்தொலைவில் உச்சியில் அமைந்துள்ளது. செல்லும் வழியில் அதாவது 16மைல்கல் தொலைவில் இந்த அழகிய நீர்வீழ்ச்சி அமைந்துள்ள செய்தியை மேயர் பிரகாஷ் கூறியதும் அதனைப் பார்க்கவேண்டும் என்ற ஆசை மேலிட்டது.இது மாத்தளை ரத்தோட்ட பிரதேசத்தில் அமைந்துள்ளது.

அனைவரும் அங்கு சென்றோம்.மாத்தளையில் பிரசித்திபெற்ற பம்பர கிரிஎல்ல நீர்வீழ்ச்சியை நோக்கி சுற்றுலாப்பயணிகள் வர ஆரம்பித்துள்ளதை அங்கு காணமுடிந்தது. கொரோனாவால் அடைபட்டுக்கிடந்த மக்கள் மெல்லமெல்ல வெளியேறத் தொடங்கியதை கட்டியம்கூறுவதை அஇது சொல்லாமல் சொல்லியது.

இங்குள்ள விசேசம் என்னவென்றால் மூவினமக்களும் ஒரேவேளையில் ஒன்றுகூடி பழகுவதும் நீராடுவதும் ஆகும். அங்கு ஜாதிமதபேதமில்லாமல் மக்கள் மகிழ்ச்சியாகஇருப்பதைக்காணலாம்.

கடந்த சில மாதங்களாக அங்கு செல்ல தடைவிதிக்கப்பட்டிருந்தநிலையில் இவ்வாரம் மீண்டும் அது திறக்கப்பட்டதாக மாத்தளை மேயர் சந்தனம் பிரகாஷ் அறிவித்திருந்தமையே மக்கள் அங்குவரக் காரணம்.

இயற்கை மனோரம்மியம் நிறைந்த பச்சைப்பசேலான காட்டுக்கு மத்தியில் அந்த நீர்வீழ்ச்சிக்கு அருகே தொங்குபாலமொன்று அமைந்திருப்பதும் சுற்றுலாப்பயணிகளைக்கவரும் அம்சமாகும்.

அங்கு மாத்தளை மேயர் சந்தனம் பிரகாஸ் மற்றும் காரைதீவு பிரதேசசபைத்தவிசாளர் கி.ஜெயசிறில் கல்முனை மாநகரசபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் மாத்தளை மாநகரசபை உறுப்பினர் ரி.எஸ்.மோகன் உள்ளிட்டோர் அச்சுற்றுலாத்தளத்தை பார்வையிட்டனர் சுற்றுலாப்பயணிகள் மக்கள் அங்கு சென்று நீராடத்தொடங்கியிருக்கின்றனர்.நாம் சென்றபோதும் மக்கள் சிலர் நீராடிக்கொண்டிருந்ததைக்காணமுடிந்தது. இன்னும் பலர் தொங்குபாலத்தில் நடந்து குதூகலித்து வருகின்றனர்.இடைநடுவில் வரும்போது பாலம் தள்ளாடும். வருவோர் பயமடைவர். இருப்பினும் பாதுக்டப்பாக இருமருங்கிலும் கம்பிகள் கட்டப்பட்டுள்ளன.அதைப்பிடித்துக்கொண்டு நடக்கலாம். நடைபாதையில் போடப்பட்டிருக்கும் பலகைகள் சிலஇடங்களில் பழுதடைந்து இருப்பதும் பயணிகள் பயமடையக்காரணம். அவற்றை ரத்தோட்ட பிரதேசசபை பழுதுபார்த்து பயணிகளை பாதுகாக்கவேண்டும் என்பது மக்களின் கோரிக்கையாகும்.

நாங்கள் அப்பகுதியில் சிறிதுநேரம் நின்று அவதானித்துவிட்டு றிவர்ஸ்டன் நோக்கி பயணித்தோம். வளைந்துநெளிந்து செல்லும் பாதையூடாக ஏறஏற குளிர்அதிகரித்தது. ஒரு கட்டத்தில் இயற்கையை ரசிப்பதற்காக ஓரிடத்தில் நிறுத்தி பார்வையிட்டோம். இலங்கை ருபவாஹினி தொலைக்கோபுரம் அமைந்துள்ள மலைடியையும் கோபுரத்தையும் பார்வையிட்டோம். பின்பு நேராக றிவர்ஸ்டன் பகுதியை அடைந்தோம். அங்கு மணித்தியாலயத்திற்கு மணித்தியாலயம் காலநிலை மாறுவதே அங்குள்ள விசேசம். திடிரேன பலத்த காற்றுவீசும். மறுகணம் மழைபொழியும். மறுகணம் வெயில்எறிக்கும்.மறுகணம் ஜில்என்று குளிர்வீசும் மறுகணம் பனிப்பெய்யும் மேகம் அடிக்கடி அரவணைக்கும். இவ்வாறான தொரு மனோரம்மியமான சூழல் அங்கு நிலவுவது விசேசம்தான்.

அங்கு சென்று நாம் சமைத்து உண்ணும்போது இனம்புரியாத மகிழ்ச்சி கிழுகிழுப்பு ஏற்பட்டது. கூடவே அட்டையின் தாக்கமும் இருந்தது. கூடவந்த ஜெயசிறில் ராஜன் போன்றோருக்கு அட்டை கடித்து தேவையான இரத்தத்தை உறிஞ்சிஎடுத்துவிட்டு அது கழன்றது. அதுவரைக்கும் அவர்களுக்கு அது தெரியவில்லை.

மறுநாள் கபரகல எனும் உல்லாசதளத்திற்குச்சென்றோம். அது மாத்தளை கண்டி எல்லையில் மலைஉச்சியில் அமைந்துள்ளது. செல்லும் வழியில் எல்கடுவ பம்பரககந்தை எனுமிடத்தில் சிறியகுகையொன்றிலமைந்த நாகமாதா ஆலயத்தில் ஒரு குடும்பத்தினரால் பொங்கலிட்டு பூஜை இடம்பெற்றது. மழைக்குமத்தியில் அதிலும் பங்கெடுத்துவிட்டு கபரகலவிற்குச்சென்று இயற்கையை ரசிக்கமுடிந்தது.

மொத்தத்தில் மாத்தளை மாநகர மாட்சிக்கு அணிசேர்க்கும் இவ் இயற்கை உல்லாசப்பயணத் தளங்கள் மக்களை பெரிதும் கவர்ந்துவருகின்றன. மாநகரமேயர் பிரகாஷின் அன்பான விருந்தோம்பலை இவ்வண் மறக்கமுடியாது 3நாள் பயணத்தின் பின்திரும்பினோம்.

அப்பகுதியிலுள்ள இயற்கைவனப்புமிக்க இன்னும் பல இடங்களையும் மக்கள் கண்டுகழித்துவருகின்றனர். கொரோனா நீங்க மக்கள் நிம்மதிப்பெருமூச்சுடன் வாழ்க்கையை ரசிக்கதொடங்கியுள்ளனர்.

(வி.ரி.சகாதேவராஜா)





# 13 ஆவது அரசியலமைப்பை முழுமையாக அமுல்படுத்துவதற்கு மாகாண சபைத் தேர்தலை அரசாங்கம் உடடியாக நடத்த வேண்டும்

சிறுபான்மையினரின் அதிகாரப்பரவலாக்கல், பங்கீடு சம்பந்தப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த இலங்கை அரசை வலியுறுத்தியதற்கு இந்திய அரசினை வாழ்த்துகின்றோம். அதே நேரத்தில் 13ஆவது அரசியலமைப்பை முழுமையாக அமுல்படுத்துவதற்கு மாகாண சபைத் தேர்தலை அரசாங்கம் உடடியாக நடத்த வேண்டும் என்று முன்னாள் மாகாண சபை உறுப்பினரும் ஈ.பி.ஆர்.எல்.எப். பத்மநாபா மன்றத்தின் தலைவருமான இரா.துரைரெட்ணம் தெரிவித்தார்.

மட்டக்களப்பிலுள்ள அவரது அலுவலகத்தில் இன்றைய தினம் வியாழக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டதற்குப்பிற்பாடு கடந்த ஒரு மாதத்துக்குள் இலங்கை அரசாங்கம் சர்வதேச ரீதியான இராஜதந்திர அழுத்தத்துக்குள்ளாக்கப்பட்டுள்ளது. குறிப்பாக மனித உரிமை ஆணைக்குழுவினுடைய அழுத்தங்கள், இலங்கை அரசாங்கத்தின் சிறுபான்மை மக்கள் தொடர்பான செயல்வடிவங்களை முன்நகர்த்த வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் வெளிநாடுகள் சம்பந்தமான இராஜதந்திரச் செயற்பாட்டில் தோல்வியைச்சந்தித்திருக்கிறது. இந்தியா 13ஆவது திருத்தத்தினை அமுல்படுத்துவது தொடர்பில் உறுதியான நிலைப்பாட்டிலுள்ளமை மீண்டும் ஒருமுறை வலியுறுத்தியிருக்கிறது. புலம்பெயர் சக்திகளுடன் ஜனாதிபதி அவர்கள் பேசப்போவதாகக் கூறியிருக்கிறார்.



இவ்வாறான விடயங்களை வைத்துப்பார்க்கும் போது இலங்கை அரசு சம்பந்தப்பட்ட விடயத்தில் சில மாற்றங்களை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இலங்கை அரசின் இந்த மாற்றங்கள், அவதானிப்புகள் ஊடாக சிறுபான்மைத் தமிழ் மக்கள் சம்பந்தப்பட்ட விடயங்களிலும், சிறுபான்மை மக்கள் யுத்த காலத்தில் பாதிக்கப்பட்ட விடயத்திலும் ஜனநாயக ரீதியான செயற்பாட்டிலும் மாற்றங்களைக் கொண்டுவந்து சிறுபான்மையினரினரை வெல்ல வேண்டும்.

கடந்த வாரம் இலங்கைக்கு இந்தியாவின் சிரேஸ்ட அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் வருகை தந்து இலங்கை இந்திய அரசுகளுடன் சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பாக இராஜதந்திர ரீதியான பேச்சுவார்த்தைகளை நடத்தி பல விடயங்கள் குறித்து ஆராய்ந்தாலும், குறிப்பாக சிறுபான்மையினரின் அதிகாரப் பரவலாக்கல், பங்கீடு சம்பந்தப்பட்ட 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்று இலங்கை அரசாங்கத்திடம் முன்வைக்கப்பட்டமைக்கு நாங்கள் இந்திய அரசினை வாழ்த்துகின்றோம். பாரட்டுகின்றோம்.

இந்த விடயங்களை உணர்ந்து முழநாட்டுக்கும் நன்மை பயக்கக் கூடிய மூன்று இனத்துக்கும் நன்மை பயக்கக் கூடிய எல்லா மாகாண சபைகளுக்கும் நன்மை பயக்கக்கூடிய 13வது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல் படுத்துவதற்கான செயல் வடிவங்களை இலங்கை. அரசாங்கம் முன்கொண்டு செல்ல வேண்டும். அதன் ஒரு கட்டமாக மாகாண சபைத் தேர்தல் நடத்தபட வேண்டும்.

அந்தத் தேர்தலை நடத்தி மக்களாட்சி அமுல்படுத்தப்படும் போது தான் 13ஆவது திருத்தச்சட்டத்தினை அமுல்படுத்தக்கூடிய சாத்தியக் கூறுகள் தென்படும். குறிப்பாக வடக்கு கிழக்கைப் பொறுத்தவரையில் 13 ஆவது திருத்தச்சட்டம், சுயாட்சி, தமிழீழம் எனப் பல கருத்துக்கள் நம் மத்தியில் முட்டி மோதினாலும், தற்சமயம் 13ஆவது திருத்தச் சட்டத்தையேனும் அமுல்படுத்தினால் சிறுபான்மையினர் நன்மை பெறுவார்கள் என்ற நிலையில். இலங்கை அரசாங்கம் 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கும் வடக்குக் கிழக்கிலுள்ள அரசியல் கட்சிகள் அதன் ஆரம்ப கட்டத்துக்கு செயல் வடிவத்தைக் கொடுப்பதற்கும்; மாகாண சபைத் தேர்தல் நடைபெற வேண்டும்.

கடந்த காலத்தில் மாகாண சபைத் தேர்தலில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் தொடர்பாக விமர்சனங்கள் இருந்தாலும் தற்சமயம் 13ஆவது திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும் என்ற தொனி சமூகத்தின் மத்தியில் வேரூன்றுகின்றது.

அத்தோடு மாகாண சபைத் தேர்தலை அரசாங்கம் நடத்துவதற்கு வடக்கு கிழக்கிலுள்ள மக்கள் பிரதிநிதிகளும், அரசியல் கட்சிகளும் ஒத்துழைப்புகளை நல்கி மாகாண சபையின் ஊடாக 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கு செயல் வடிவம் கொடுக்க கேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றேன் என்று தெரிவித்தார்.

# தேசியக் கட்சி என்று சோய்லும் யாருக்கும் எங்களைப் பற்றிப் பேசுவதற்கு அருகதை கிடையாது

யாரையும் விமர்சிக்க விரும்பவில்லை ஆனால், தர்மலிங்கத்தைச்சுட்ட கட்சி இன்று தேசியக் கட்சி என்று சொல்கிறது. இப்போது தேசியக் கட்சி என்று சொல்லும் யாருக்கும் எங்களைப் பற்றிப் பேசுவதற்கு அருகதை கிடையாது என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வி.ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

கிழக்கில் தமது கட்சியின் அரசியல் செயற்பாடுகள் குறித்த செயற்பாட்டுக்காக வருகை தந்திருந்த வி.ஆனந்தசங்கரி ஊடகவியலாளர்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இப்போது தேசியக் கட்சி என்று சொல்லும் யாருக்கும் எங்களைப் பற்றிப் பேசுவதற்கு அருகதை கிடையாது எங்களைப் பற்றிப் பேசுவதாக இருந்தால் தந்தை செல்வாவினுடைய தமிழரசுக் கட்சிக்கு மாத்திரம்தான் உண்டு. தந்தை செல்வா ஒரு போதும் இம்சையைப் பற்றிப் பேசவில்லை. ஜீ.ஜீ.பொன்னம்பலம் ஒருபோதும் இம்சையைச் செ



ால்லவில்லை. பாராளுமன்றம் ஏறத் தகுதியில்லாதவர்கள் 20 வருடங்களாகப் பாராளுமன்றத்தில் இருக்கிறார்கள். பிச்சை எடுக்கிற ஒருத்தன் கூட பாராளுமன்றத்தில் இருக்கலாம். ஆனால், கை சுத்தமில்லாத, இதயம் சுத்தமில்லாதவர்கள் பாராளுமன்றத்தில் இருக்கத் தகுதியற்றவர்கள். இவர்கள் எதைக் கேட்கிறார்களோ அதற்கு அவர்கள் பொறுப்பாக இருந்திருக்கிறார்கள். என்னைக் கொலை செய்ய வந்ததற்கான ஆதாரம் என்னிடமிருக்கிறது.

தங்கத்துரை திட்டமிட்டுக் கொல்லப்பட்டார். ஆதனை யாராவது கேட்டார்களா. கிள்ஸ்லி ராஜநாயகததினுடைய இடத்தைப் பிடித்தவர் கேட்டாரா. இவர்கள்தான் தலைவர்கள். மக்கள் பாவம். புதிய பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் ஒரு நல்லதொரு அறிவாளி விசயம் தெரிந்தவர். ஆனால் வரலாறு தெரியாதவர். வரலாறு தெரிந்த ஒருவர் சம்பந்தருடன் சேர்வாரா. சும்பந்தருடைய குற்றங்களைப் பட்டியல் போட்டுக் காட்ட முடியும். சம்பந்தர் ஒரு குற்றமும் செய்யவில்லை என்று விட்டு விடுவோம். இப்போது யார் கையொப்பம் இடுவது. நான் கடிதம் கொடுப்பதா நீ கடிதம் கொடுப்பதா என்று அடிபடுகிறீர்கள். ஆனால் 22 பேருடன் பாராளுமன்றம் போனீர்கள். ஆறு வருடம் இருந்து எல்லா வசதிகளையும் அனுபவித்தவர்கள். பின் அரசாங்கத்திற்கு முட்டுக் கொடுத்தவர்கள் அரசாங்கத்திடம் கேட்டீர்களா. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏதாவது செய்யச் சொல்லி கேட்டீர்களா. இப்போது என்ன பெரிதாக நாடகம் ஆடுகிறீர்கள். நாங்கள் ஒருவரிடமும் கேட்கவில்லை ஏன் மக்கள் எங்களில் நம்பிக்கை வைக்கிறார்கள்.

நூற்றுக்குத் தொண்ணூறு வீதமான கட்சிகள் கறைபடிந்தவைகளே, குழறுபடிகள், குற்றவாளிகள் இருக்கிறார்கள். ஒரு குற்றமும் செய்யாத கட்சி என்றால் தொண்டமானுடன் சேர்த்து உருவாக்கப்பட்ட அன்று தொடக்கம் இன்று வரைக்கும் நிதானமாகச் செயற்படும் கட்சி தமிழர் விடுதலைக் கூட்டணி ஒன்றுதான். தந்தை செல்வா, ஜீ.ஜீ.பொன்னம்பலம், தொண்டமான் ஆகியோர் இனி நாங்கள் பிரியக் கூடாது ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று உருவாக்கப்பட்ட கட்சி இன்றும் உயிரோடு இருக்கிறது. மக்களது பிரச்சினையைத் துணீர்ப்பதற்குமு; தமிழர்களின் உரிமை பற்றிப் பேசுவதற்கும் அந்தக் கட்சிக்குத்தான் உரிமையும் இருக்கிறது.

உயரத்திலிருந்து இறங்கி இறங்கி பாதாளத்துக்கு வந்துவிட்டோம். இனியேனும் காப்பாற்றுவதென்றால் தமிழர் விடுதலைக் கூட்டணி ஒன்றால்தான் முடியும்.



**ம/மமே/கற்சேனை அ.த.க பாடசாலையில் இவ்வருடம் க.பொ.த.சாதாரண தரத்தில் சித்தியடைந்த மாணவர்களுக்கு உதயகுமார் கல்வி மையத்தினுடாக பாராட்டுகளும் கற்பதற்கான உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டது.இந்நிகழ்வில் உதயகுமார் கல்வி மையத்தின் ஸ்தாபக தலைமை ஒருங்கிணைப்பாளர் திரு.ந.உதயகுமார்,செயலாளர் திரு.ம.ஜெயக்கொடி,பொருளாளர் திருமதி அனோஜன் விதுசா,முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும்,உதயகுமார் கல்வி மையத்தின் தலைமை ஆலோசகருமான திரு பா.அரியநேத்திரன் ,மக்கள் நல இளைஞர் மன்றத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளர் திரு.வே.அன்பழகன்,பாடசாலை அதிபர் திரு.சிறிதரன்,ஆசிரியர்கள்,மாணவர்கள்,பெற்றோர்கள் கலந்துகொண்டனர்.**

# பண்டோரா ஆவணத்தின் நோக்கம் டயஸ்போராவின் நோக்கமாக இருக்கலாம் அமைச்சர் சீ.பீ. ரத்னாயக்க



**க.கிஷாந்தன்**

பண்டோரா ஆவணத்தின் நோக்கம் டயஸ்போராவின் நோக்கமாக இருக்கலாம் என சுட்டிக்காட்டியுள்ள அமைச்சர் சீ.பீ. ரத்னாயக்க, இவ்விவகாரம் தொடர்பில் விசாரணை நடத்தப்படும் எனவும் கூறினார்.

கொத்மலை இறம்பொடை பகுதியில் இன்று நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர், பண்டோரா ஆவணம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

"பண்டோரா ஆவணத்தில் பெயரிடப்பட்டுள்ள இலங்கையர்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக ஜனாதிபதி குழுவொன்றை அமைத்துள்ளார். அந்த குழுவின் அறிக்கை வெளிவந்த பின்னர் நடவடிக்கை எடுக்கப்படும். எவரையும் பாதுகாக்க வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு கிடையாது.

பண்டோராவின் நோக்கம் டயஸ்போராவின் நோக்கமெனில் அதனையும் நாட்டுக்கு வெளிப்படுத்துவோம்.

பண்டோரா என்ற பெயரை நானும் இன்றுதான் கேள்வி படுகின்றேன். எனது கையில் வேண்டுமானால் 100 டொலர்கள் இருக்கலாம்.

அதேவேளை, உலகளவில் இரசாயன உர பயன்பாடு தவிர்க்கப்பட்டு வருகின்றது. நாமும் அந்த இலக்கை நோக்கி பயணிக்க வேண்டும்." என்றார்.

# 1 மில்லியன் செலவில் 500குடும்பங்களுக்கான நிவாரப்பணி ஆரம்பம்! நேற்று மண்டானை கஞ்சிகுடிச்சாறு மக்களுக்கு வழங்கிவைப்பு



**(வி.ரி.சகாதேவராஜா காரைதீவு குறூப் நிருபர்)**

கொரோனாத் தொற்றினால் வாழ்வாதாரத்தை இழந்த ஒருதொகுதி அம்பாறை மாவட்ட மக்களுக்கு 1மில்லியன் ருபா(10 லட்சருபா) செலவில் உலருணவு நிவாரணம் வழங்கும் வேலைத்திட்டம் நேற்று(8)வெள்ளிக்கிழமை ஆரம்பமானது.

கனடா நாட்டிலுள்ள 'ரு டீப் 'நிறுவனம் இதற்கான நிதிஅனுசரணையை கிழக்கின் பிரபல சமுகசெயற்பாட்டாளரும் காரைதீவு பிரதேசசபைத்தவிசாளருமான கிருஸ்ணபிள்ளை ஜெயசிறிலினூடாக வழங்கியுள்ளது.

நேற்று திருக்கோவில் பிரதேசத்திலுள்ள மிகவும் பின்தங்கிய மண்டானை மற்றும் கஞ்சிகுடிச்சாறு ஆகிய கிராம மக்களுக்கு உலருணவு நிவாரணம் வழங்கும் பணி ஆரம்பித்துவைக்கப்பட்டது.

அம்பாறை மாவட்ட மேலதிக அரசஅதிபர் வேதநாயகம் ஜெகதீசன் திருக்கோவில் பிரதேச செயலாளர் த.கஜேந்திரன் உதவிபிரதேசசெயலாளர் க.சதிசேகரன் தவிசாளர் கி.ஜெயசிறில் நிவாரணப்பணி ஒருங்கிணைப்பாளர் வி.ரி.சகாதேவராஜா உள்ளிட்ட பிரமுகர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இப்பணிகள் அந்தந்த பிரதேச செயலக அனுமதியுடன் முறைப்படி உரிய அதிகாரிகளைக்கொண்டு கடந்த காலங்களில் இடம்பெற்றதைப்போன்று நடைமுறைப்படுத்தப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

# திடீர் மரண விசாரணை அதிகாரியாக ஜவாஹிர் நியமனம்

**நிந்தவூர் நிருபர்**

சாய்ந்தமருது பிரதேசத்துக்கான புதிய திடீர் மரண விசாரணை அதிகாரியாக கல்முனைத் தொகுதி பொது ஜன பெரமுன கட்சியின் அமைப்பாளரான றிஸ்லி முஸ்தபாவினுடைய பிரத்தியேக செயலாளராக பணியாற்றும் கல்முனையை சேர்ந்த ஏ.எச்.அல் ஜவாஹிர் நியமிக்கப்பட்டுள்ளார்.

நீதி அமைச்சரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான கௌரவ



அலி சப்ரி அவர்கள் இந்நியமனத்தை வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இவர் நீண்ட காலமாக மொழிபெயர்ப்பாளராகவும், சமாதான நீதவானாகவும் செயற்பட்டு வருவதோடு இப்பிராந்தியத்தின் சமூக சேவை அமைப்புகளின் ஊடாக சமூக சேவையினை நடைமுறைப்படுத்தி வருகின்ற மிக முக்கியமான சமூக சேவையாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந் நியமனத்தை இப்பிராந்தியத்தினை முன்னிலைப்படுத்தி வழங்கியமைக்காக நீதி அமைச்சர் கௌரவ அலி சப்ரி அவர்களுக்கு இப்பிராந்தியத்தினுடைய சமூக நல சிந்தனையாளர்கள் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# மோட்டர் சைக்கிள் திருடன் கைது

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் மோட்டார் சைக்கிள்களை திருடி வந்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவரிடம் இருந்து மூன்று மோட்டார் சைக்கிள்களையும் கைப்பற்றியுள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன தெரிவித்தார்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் தொடர்ந்து மோட்டார் சைக்கிள்கள் கடந்த சில மாதங்களாக திருடப்பட்டு வந்ததையடுத்து வாழைச்சேனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் பி.எம்.ஜயசுந்தரவின் வழிகாட்டலில் வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் தலைமையில் பொலிஸ் அதிகாரிகள் மேற்கொண்ட விஷேட நடவடிக்கையின் போது இளைஞர் ஒருவர் மோட்டார் சைக்கிள்கள் திருடுவதாக கிடைத்த இரகசிய தகவலையடுத்து குறித்த இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவரிடம் இருந்து மூன்று மோட்டார் சைக்கிள்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

குறித்த சந்தேக நபர் மீராவோடை கொண்டயன்கேணி பிரதேசத்தை சேர்ந்த 19வயது இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் இவருடன் தொடர்புடைய வேறு யாராவது இருக்கின்றார்களா என்ற சந்தேகத்தின் பேரில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன மேலும் தெரிவித்தார்.

